
# தமிழரசு

16-7-1979 50 காசு.



# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை—சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

**எங்கும் சமத்துவம் ஓங்க**
**எல்லாரும் ஓர் குலம்**
**எல்லாரும் ஓர் நிறை**
**எனும் இலட்சியம் ஈடேற**
**தொண்டாற்றுவோம்!**

# பத்தாவது ஆண்டில்...

ஒன்பது ஆண்டு நிறைவு பெற்று
1979 ஜூலை முதல் நாள் பத்தாவது
ஆண்டில் தனது பணியினைத் தொடரு
கிறது 'தமிழரசு' புதிய பகுதிகளுடன்
புதுமை மிளிரும் பொலிவுடன்
எல்லாரும் போற்றும் வகையில்
எங்கள் பணி தொடர்ந்திடும்.
'தமிழரசு' தழைத்
தோங்கி வளர
உதவும் தூய உள்
ளங்களுக்கு
எங்கள்
நன்றி!
வணக்கம்!




**தமிழரசு**

மலர்: 10 இதழ்: 2

16-7-1979

# உணவு உற்பத்தியில் ஒரு சாதனை!

**மாண்புமிகு உணவு அமைச்சர்**
**திரு ஜி. ஆர். எட்மண்ட்**



தமிழக மக்களின் தலையாய உணவுப் பொருளான அரிசி, தாராளமாகவும், நியாயமான விலைகளிலும் இப்போது கிடைக்கின்றது. அரசிடமும் கணிசமான அளவில் கையிருப்பு உள்ளது. அரிசி கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த நிலையும், அரிசியின் விலைகள் பயங்கரமாக ஏறி விட்டிருந்த நிலையும், பழங்கால நிகழ்வுகளாக மாறி, இப்போது உணவு நிலைமையைப் பொறுத்த வரை, பிரச்சினையே இல்லாத அளவுக்கு, நிலைமை சுமுகமாக இருப்பது, நமக்கு மிகுந்த மன நிறைவு அளிக்கக் கூடியதாகும்.

தமிழகத்தில் உணவு நிலைமை வசதியாகவும், சுமுகமாகவும் இன்று இருப்பதைப் போல், சென்ற பத்து பதினைந்து ஆண்டுகளில் என்றுமே இருந்ததில்லை என்று நாம் துணிந்து கூறலாம். உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயப் பெருமக்கள் எடுத்துக் கொண்டுள்ள பெருமுயற்சியின் காரணமாகவும், அரசின் விழிப்பான நடவடிக்கைகளின் காரணமாகவும், இந்த நிலைமை தமிழகத்தில் உருவாகியுள்ளது, நம் அனைவருக்கும் பெருமை அளிக்கும் ஒரு சாதனையாகும்.

1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல், நாடு முழுவதும் அரிசியைப் பொறுத்தவரையில், ஒரே உணவு மண்டலம் என்று இந்திய அரசு அறிவித்தது. அதனையொட்டி, நமது மாநிலத்தின் நலன்கள் பாதுகாக்கப்பட, முன்னெச்சரிக்கையாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அந்த முன்னேற்பாடுகளின் பலனாக இன்று நிலைமை சீராக உள்ளது என்பதே, தமிழக அரசின் துணிவான நடவடிக்கைகளுக்கும், தெளிவான கொள்கைகளுக்கும் சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

1978-79ஆம் ஆண்டில் தமிழகத்தின் நெல் விளைச்சல் 60 இலட்சம் டன்கள் அளவில் அமைந்து இருந்தது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆதரவான பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டதன் பயனாகவும், தங்கள் உழைப்பை வித்தாக இட்டு, தங்கள் உறுதியை உரமாகப் பயன்படுத்தி வேளாண் பெருமக்கள் பாடுபட்டதன் பயனாகவும், தன்னுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அளவுக்குத் தமிழகம் இன்று நெல்லை உற்பத்தி செய்து வருகிறது. விவசாயிகளின் உற்சாகம் குறையாமல் இருக்க வேண்டுமானால், நெல்லுக்கு நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்பதில் இந்த அரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது.


உணவு உற்பத்தியும், அரிசி விலையும், நெல் கொள் முதல் விலையும் ஒன்றையொன்றுதழுவி நிற்கின்றன. நெல் கொள்முதல் விலையைப் பொறுத்து, வேளாண்மைப் பெருங்குடி மக்கள், நெல் பயிரிடும் பரப்பினையும், வெளிச் சந்தையில் நெல் விற்பனையையும் நிர்ணயம் செய்து கொள்கிறார்கள். இதனால் தமிழ்நாட்டு மக்கள் அதிக அளவு பயன்படுத்துகின்ற அரிசியின் விலையும் பாதுகாக்கப்படுகிறது. இந்த நோக்கத்தில்தான் கொள்முதல் விலையை இந்திய அரசு உயர்த்த வேண்டுமென்று தமிழ்நாடு அரசு பல்வேறு கட்டங்களில் வலியுறுத்தி வருகிறது.

நெல் கொள்முதல் விலை, ஆண்டுதோறும் மத்திய அரசினால் விவசாய விளைபொருள்கள் விலைவாசிகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின்பேரில் நிர்ணயிக்கப்படுகிறது. 1978-79ம் ஆண்டிற்கு மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ.85 என்ற விலை மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோதுமைக்கு, சாகுபடிச் செலவை அடிப்படையாகக் கொண்டு, குவிண்டாலுக்கு ரூ. 112.50 என்று விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டி கோதுமையின் சாகுபடிச் செலவைவிட நெல்லின் சாகுபடிச் செலவுஎந்த வகையிலும் குறைந்ததாகஇருக்க முடியாது-மாறாக கூடுதலாகத்தான் இருக்கின்றது என்பதையும் ஆதாரப்பூர்வமாக நிலைநாட்டி, நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்தியது. வேளாண்மை விளை பொருள்கள் விலைவாசி ஆணைக் குழுவிடமும் இக்கருத்து பலமாக வலியுறுத்தப்பட்டது. முதலமைச்சர்கள் மாநாட்டிலும் இந்தக் கருத்தைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் வன்மையாக வற்புறுத்தினார்கள். இது குறித்து தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தியப்பிரதமருக்கும் ஒரு கடிதம் எழுதினார்கள். ஆயினும் சென்ற ஆண்டு மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ.77 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்ததை எட்டு ரூபாய் அளவில் மட்டுமே உயர்த்தி நெல் விலையை ரூ.85 என்று மத்திய அரசு நிர்ணயித்தது, தமிழக அரசுக்கு மட்டுமல்ல, தென் மாநில விவசாயப் பெருமக்களுக்கும் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

மத்திய அரசு அறிவிக்கும் நெல் விலை மாநில அரசுக்குத் திருப்தி அளிக்காவிட்டால், தமிழக விவசாயிகளின் நலனைக் கருதி மத்திய அரசு அறிவிக்கும் விலைக்குமேல் கூடுதலாக குவின்

டாலுக்கு ரூ. 20 அதிகமாகக் கொடுத்து நெல்லை வாங்கிக் கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. இந்த விலை உயர்வு வருகிற குருவை பட்டத்திலிருந்து செயல்படுத்தப்படும்.



பொது விநியோக முறைகளின் கீழ் அரிசி வழங்குவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகவும், நியாயமான விலையிலும் கிடைத்து வருவதால், பொது விநியோக முறையின் கீழ் அரிசி விற்பனை, சென்ற ஆண்டில் மிகக் கணிசமாகக் குறைந்தது. 1976ஆம் ஆண்டில் 6 இலட்சம் டன்கள் விற்பனைக்கு எதிராக, 1978ஆம் ஆண்டில் 1 இலட்சம் டன்கள் அரிசிதான் விற்பனை யாயிற்று. இவ்வாறு பொது விநியோக முறையில் விற்பனை குறைந்துள்ளது, வெளிச் சந்தையில் தாராளமாக அரிசி கிடைத்து வருவதால்தான். அதே சமயத்தில், விலைகள் ஏறிவிடாமல் தடுப்பதற்குப் பாதுகாப்பு நடவடிக்கையாகப் பொது விநியோக முறையும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலைக்கடை திறக்கப்படும் என்று இந்த அரசுபொறுப்பேற்றவுடன் அறிவிப்புச் செய்தது. தமிழ்நாட்டில் 16,660 தாய் கிராமங்கள் உள்ளன. இவற்றில் குடியிருப்புகள் இல்லாத கிராமங்கள் 925. இவை நீங்கலாக 15,735 குடியிருப்புகள் உள்ள வருவாய்க் கிராமங்கள். இவற்றில் ஏறக்குறைய 5,800 கடைகள் இயங்கி வந்தன. இக் கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு இன்றியமையாத மற்ற பொருள்களையும் இக் கடைகளில் விற்பதற்கு ஏற்பாடு செய்து, அவற்றைப் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றும் நடவடிக்கையை அரசு பின் பற்றியது. ஏற்கெனவே இயங்கி வந்த உணவுப் பங்கீட்டுக் கடைகளைப் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றுவது ஓர் அம்சம். கடைகள் இல்லாத கிராமங்களில் புதிதாகக் கடைகளைத் திறப்பது மற்றோர் அம்சம். இந்த இரண்டு அம்சங்களையும் ஒருங்கிணைத்து இத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு தஞ்சை, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் எஞ்சிய மாவட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இயங்கி வந்த ஏறக்குறைய 5,800 கடைகளில், 5,600க்கு மேற்பட்ட உணவுப் பங்கீட்டுக் கடைகள் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட்டு விட்டன. புதிதாகக் கடைகள் திறக்கப்பட வேண்டிய சுமார் 10,000 கிராமங்களில் 8,000 கிராமங்களில் கடைகள் இப்போது திறக்கப்பட்டு விட்டன.

சர்க்கரை இப்போது வெளிச் சந்தையில் தாராளமாக பொது மக்களுக்குக் கிடைக்கிறது. பருப்பு வகைகளைப் பொறுத்த வரையில் தமிழகம் பற்றாக்குறை மாநிலமாகும். மொத்தத்தில் பருப்பு வகைகளின் தேவை தமிழ் நாட்டில் 6 இலட்சம் டன்கள் என்று மதிப்பிட்டால் இங்கு அவற்றின் உற்பத்தி ஒரு இலட்சம் டன்களுக்கும் குறைவாக உள்ளது. பருப்பு வகைகளின் விலைகளை சீர்படுத்தும் நோக்கத்துடன் கூட்டுறவு அமைப்புகளும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், பருப்பு உற்பத்தியாகும் உபரி மாநிலங்களிலிருந்து, விளைச்சல் காலத்தில் அதிக அளவில் வாங்கி, இங்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளோம். கடலை எண்ணெய் விலையும் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு ஏறவில்லை.

மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான இன்றியமையாப் பொருள்களில் வாணிபத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன், 7 வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள் அமலில் உள்ளன.

உணவுத் துறையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஒரு சிறந்த சாதனையைச் செய்துள்ளது என்று சொன்னால், அது மிகையாகாது. கொள்முதல்செய்தல், அரிசியைச் சேமித்துவைத்து பொது விநியோகத்திற்கு ஒதுக்






# முதல்வரின் முத்துக்கள்

* சட்டத்திற்கு உணர்ச்சி இல்லை; அதைப் பயன்படுத்துகிறவர்களுக்கும், அதை இயற்றியவர்களுக்கும் தான் உணர்ச்சி உள்ளது. அப்படிப் பட்ட சட்டம் மனிதனை மனிதனாக வாழச் செய்கிறது. ஒழுக்கம் மனிதனை நேர்மைக்குச் சொந்தக் காரனாக்குகிறது!

* குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட மனிதனைப் பார்த்துக் "குடிகாரன்" என்று குறிப்பிட்டால் கோபம் வருவதில் இருந்து ஒரு பகிரங்க உண்மை தெரிகிறது. அதாவது, மது அருந்துவது பொதுப்பண்பாட்டிற்கு ஒவ்வாத ஒன்று என்பதைக் குடிகாரனும் ஒப்புக் கொள்கிறான்; உணர்கிறான். இது ஒன்றே போதும் குடிப் பழக்கத் தீமையை விளக்கிட— மதுவிலக்கின் அத்தியாவசியத்தை உணர்ந்திட!

* அரசியல்வாதிகள் தொழிலாளர்களைத் தனியாகப் பிரித்து இலாபம் சம்பாதிக்கத் தொழிலாளர்கள் அனுமதிக்கக் கூடாது. தொழிலாளர்களை வழிநடத்திச் செல்பவர், தொழிலாளர்களில் ஒருவராகவே இருக்க வேண்டும்.

---






கீடு செய்தல் போன்ற பணிகளுடன் மக்களுக்குத் தேவையான பல பணிகளையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது.

சேமிப்பு முறையிருப்பில்உள்ள அரிசியைத் தரம் கெடாமல்பாதுகாத்துப் பொது விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு வசதியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தன்னுடைய சொந்த வருவாயிலிருந்து 1.25 இலட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட, சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியுள்ளது. மேலும் 50,000 டன்கள் கொள்ளளவு கொண்ட 26 கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. அரிசி மட்டுமல்லாமல், கோதுமை; சர்க்கரை கடலை எண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருள்களையும் இக் கழகம் சேமித்து வைத்து, விலைவாசிகள் ஏறும் நேரத்திலோ, பொருள்களின் தட்டுப்பாடு ஏற்படும் கட்டத்திலோ நியாய விலையில் விநியோகத்தை மேற்கொள்கிறது. கடலை எண்ணெயில் கடுமையான நெருக்கடி ஏற்பட்ட காலத்தில், நியாயமான விலையில் கடலை எண்ணெய்யையும், சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய்யையும் விற்க இக்கழகம் மேற்கொண்ட முயற்சிகள், விலைகளை நிதானப்படுத்துவதற்குப் பெரிதும் உதவின.

13 நவீன மயமான அரிசி ஆலைகளை இக்கழகம் நடத்தி வருகிறது. இந்த ஆலைகளின் அரைவைத் திறன் 93 விழுக்காடு அளவுக்குச் சென்ற ஆண்டு பயன்படுத்தப்பட்டது. இவையனைத்தும் இலாபகரமாகவே இயங்கி வருகின்றன. பொதுமக்களுக்கு நியாயமான விலையில் சிமெண்ட் விநியோகத்தையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது. கிராம மக்களுக்கும், நகர்வாழ் மக்களுக்கும் அரசு நிர்ணயித்த விலைகளில் தடையின்றி சிமெண்ட் கிடைக்க வசதியான சூழ்நிலையை இக்கழகம் உருவாக்கியுள்ளது பாராட்டுவதற்குரியதாகும்.

விவசாயப் பெருங்குடி மக்களின் குறைகளைப் போக்குகின்ற வகையில் 40 கோடி ரூபாய் அளவிற்கு இப்போது நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்க்க, தமிழக அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் இத்தகைய சலுகைகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளின் வரலாற்றிலே இது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடியதாகும்.




# சமுதாய நன்மையையே சிந்தித்த தலைவர்

**ஜி. ஆர். தாமோதரன்,**
துணை வேந்தர்,
சென்னைப் பல்கலைக் கழகம்

தலைவர் காமராஜ் அவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். அவர் நல்ல நண்பர். மிகப் பெரிய தலைவர்.

நாட்டு வளர்ச்சியிலேயே எப்பொழுதும் அக்கறை கொண்டவர்; தனக்கு என்று வாழாத மனப்பாங்கு உடையவர். காமராஜ், சமுதாய நன்மையைப்பற்றியே எப்பொழுதும் சிந்தித்துச் செயல்பட்டவர்.

1951-ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக தலைவர் காமராஜ் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

1952-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நின்று பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஐந்தாண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பிறகு, இங்குள்ள கல்வி நிறுவனங்களின் தொடர்பின் காரணமாகவும் இங்கு கவனிக்க வேண்டிய வேலைகள் அதிகமாக இருந்ததாலும் மீண்டும் பாராளுமன்றத்திற்குப் போட்டியிடவில்லை. 'சட்டமன்ற மேலவைக்கு, சுயேச்சை உறுப்பினராகப் போட்டியிடப்' போகிறேன் என்று காமராஜ் அவர்களிடம் சொல்லிவிட்டு, அவருடைய அனுமதியுடனேயே மேலவைக்குப் போட்டியிட்டேன்.

''நீங்கள் எல்லாருக்கும் பொதுவாக இருக்க வேண்டியவர்; சுயேச்சையாகவே இருங்கள்'' என்று சொல்லிய காமராஜ் அவர்கள், என்னை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் யாரும் போட்டியிட வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள்.

என்னிடம் நிரம்ப நம்பிக்கை கொண்டிருந்தார். என்னோடு தொடர்புடைய கல்வி நிறுவனங்கள் வளர்ந்து முன்னேற்றம் அடைவதைக் கண்டு மகிழ்ந்தார்.



காமராஜ் அவர்களிடம் யாராவது பகைமை—விரோதம் பாராட்டினாலும், அவரைப் பற்றித் தவறாகப் பேசியிருந்தாலும் அதை அவர் பொருட்படுத்தியது கிடையாது. கொஞ்சம்கூடத் தனிப்பட்ட முறையில் கோபம் கொண்டது கிடையாது. இதை நான் நன்கு அறிவேன்.

கல்வி வளர்ச்சியிலே காமராஜ் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். பொது அறிவுமிக்கவர். High degree of common sense உடையவர்; எதிலும் நல்ல முடிவைக் காண்பவர்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்காக தீவிரமாக வேலை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். பெரிய பெரிய இயந்திரங்கள் எல்லாம் வந்துகொண்டிருந்தன.

அப்பொழுது இருந்த தலைமைப் பொறியாளர் அவர்களோ, ''இவ்வளவு பெரிய இயந்திரங்களை எடுத்துச் சென்றால் சாலையிலுள்ள பாலங்கள் தாங்காது'' என்று கூறினார்.

இதையறிந்த முதலமைச்சர் காமராஜ் அவர்கள், ''நெய்வேலித் திட்டம் மிகப் பெரிய திட்டம்; பழுப்பு நிலக்கரி வேண்டும் என்று நினைக்கிறோம். இதனால் மின்சாரமும் கிடைக்க வேண்டும். தொழிலும் பெருகவேண்டும் என்று நினைக்கிறோம். அப்படியிருக்கும்போது இயந்திரங்களை எப்படியாவது கொண்டு போய்ச் சேர்க்க வழி செய்யணும். அதைப் பாருங்கள்'' என்றார்.

அதற்குப் பிறகு, சாலையிலுள்ள பாலங்களை வலிவுப்படுத்தினார்கள். இதனை, காமராஜ் அவர்கள் எடுத்துரைத்த பிறகுதான் புரிந்து கொண்டு செயல்பட்டார்கள். அப்பொழுது நான் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் டைரக்டராக இருந்தேன். இது எனக்கு நன்றாகத் தெரியும்.


காமராஜ் அவர்கள் சிறந்த முதல்தரமான இலட்சியவாதி. எங்கள் கல்லூரியான பி.எஸ்.ஜி. கல்லூரியில் வந்து பேசும்பொழுது எல்லாம், ''இங்குள்ள மாணவர்கள் பெரிதும் முன்னேற வேண்டும். இவர்களால்தான் நாடு முன்னேற வேண்டும்'' என்பார்.

இப்பொழுது அமல்படுத்தப்பட்டு வரும் +2 கல்விமுறை மிகச் சிறந்த ஒன்றாகும். கிராமத்திலுள்ள மாணவர்கள் அங்குள்ள பள்ளிகளிலேயே மேல்நிலைக் கல்வியைப் பயில வாய்ப்பு உள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திய தமிழகக் கல்வி அமைச்சர் அவர்களும் பாராட்டுக்குரியவர் ஆவார்.

வெளிமாநிலங்களிலுள்ளவர்கள் எல்லாம் +2 கல்விமுறை நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும் முறையை அறிந்து கொள்ள வருகிறார்கள். நாம் செயல்படுத்திவரும் திட்டத்தைப் பாராட்டுகிறார்கள்.

காமராஜ் அவர்கள் இப்பொழுது இருந்தால் +2 கல்வி முறை அமல்செய்யப்படுவது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள் - பாராட்டுவார்கள் என்பது எனது நம்பிக்கை!




## மனமாரப் பாராட்டுகிறேன்!

''காமராசர் ஏழைகளின் வாழ்விற்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். அவருடைய தூய தொண்டுள்ளத்தை நான் மதிக்கிறேன். அரசாங்க நிர்வாகத்திலுள்ள தாமதத் தன்மையைப் போக்குவதற்காக அவர் கொண்டு வந்துள்ள இந்த 'சிவப்பு நாடா முறை ஒழிப்புத்திட்டத்தை' நான் பூரணமாக ஆதரிக்கிறேன். என் வேண்டுகோளை ஏற்று இந்த தண்டலம் பகுதிக்கு வந்து மக்கள் குறைகளை நேரில் கேட்க இசைந்து இங்கு விஜயம் செய்திருக்கும் காமராசர் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.''

—பேரறிஞர் அண்ணா

('காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பேரறிஞர் அண்ணா கூட்டிய 'தண்டலம்' மாநாட்டில் பேசியது.)



# உரைகல்

கு. ராஜவேலு, எம்.ஏ.,

ஒரு மனிதனுடைய பெருமையை அறிவதற்கும் அவனுடைய சிறுமையைத் தெளிவதற்கும் உரைகல்லாக இருப்பது, அவரவர்கள் ஆற்றும் செயல்களேயாகும். தங்கத்தின் மாற்றை -தூய தன்மையைத் தெரிந்து கொள்வதற்கு அதை உரைத்துப் பார்ப்பார்கள். அக்கல்லைக் ''கட்டளைக்கல்'' என்றும் கூறுவார்கள். ஒரு மனிதனின் ஒழுக்கம், குணம், அறிவு ஆகிய பண்பு நலன்களை-அவனுடைய செயல்களை ஆராய்ந்து பார்த்தாலே, அம்மனிதனிடம் உயர்ந்த பண்புகள் மிகுதியா அல்லது தாழ்ந்த குணங்கள் மிகுதியா என்பதை ஐயமறத் தெளிந்து கொள்ளலாம்.

உயர்ந்த பண்புடையவர்கள் மக்களால் போற்றப்படுகிறார்கள். தாழ்ந்தவர்கள் மக்களால் ஒதுக்கப்படுகிறார்கள். இக் கருத்தைத்தான் — பொய்யாமையை, அரசியலிலும் வற்புறுத்திய வள்ளுவர்,

'பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.'

என்னும் குறளிலே கூறியுள்ளார். இந்த அளவுகோலை வைத்து நாம் மறைந்த காமராஜரை அளந்து பார்த்தால் அவர் மிகப் பெரியவர்-தனிமிகப் பெரியவர்-செயற்கரிய செய்த பெரியவர் என்பதை எவரும் எளிதில் ஏற்றுக் கொள்வர். அவர் தன்னலம் அற்றவர். தாய்நாட்டின்பால் தணியாத அன்பு பூண்டவர். அடிமைத் தனத்தை எண்ணி எண்ணி வெட்கத்தால் உள்ளம் சிறுத்தவர். 'உயிரைக் கொடுத்தும் விடுதலையைப் பெறவேண்டும் என்று உடல் சிலிர்த்துப் பொங்கியெழுந்தவர். தனக்கும் தன் மக்களுக்கும் இடையே வேற்றுமையைக் காணாதவர், வித்தகர். தன்னுடைய நண்பர்களை உடலாலும் உள்ளத்தாலும் ஒரு சேர அணைத்துக் கொண்ட உத்தமர். ஏழையென்றும் செல்வனென்றும் பாகுபாடு காட்டாத பண்பாளர். பிறருடைய துன்பக் கதையைக் கேட்டால் அவருடைய பெரிய கண்கள் கலங்கி விடும். அதை அவர் பிறருக்குக் காட்டாமல் இருப்பதற்காக உடனே அவ்விடத்திலிருந்து எழுந்து சென்று விடுவார். சிறிது நேரங் கழித்து-தம் உள்ளம் சமநிலையை அடைந்த பின் மீண்டும் வந்து - அவருடைய துன்பத்தைத் தணித்து வழி அனுப்புவார். தக்கவரிடம் சொல்லி அவருடைய துன்பத்தையும் தீர்த்து வைப்பார்.

இப் பரிவு நிறைந்த உள்ளத்தை நான் 1954 வரை நேரிலே பல முறை கண்டிருக்கிறேன். ஒருவர் தலைவராவதற்கு இதை விட வேறென்ன தகுதி வேண்டும்? வேறென்ன பண்பு வேண்டும்? எங்கெலாம் துன்பங் காணினும் அங்கெலாம் அங்கம் கரைய நின்று அழுதவர் அவர். அவருடைய அரசியல் அறிவு உலகத்தைத் தழுவிய ஒப்பற்ற அறிவு. தமிழ் நாட்டின் அரசியல் போக்கை எவ்வளவு தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தாரோ அதே அளவிற்கு உலக அரசியலையும் தெரிந்து வைத்திருந்த செம்மல் அவர். அவருடைய நெருங்கிய நண்பர்களுக்கு இது நன்கு தெரியும்.



தன்னைப் பற்றிய எண்ணமில்லாது இருப்பது தான் தன்னல மறுப்பு என்று சிலர் நினைக்கிறார்கள். தன்னைப் பற்றிச் சிந்திக்காதவன்-தன் மேன்மையைப் பற்றி எண்ணாதவன் எப்படிச் சிறந்த மனிதனாக முடியும்? பிறர் நலத்தைப் புறக்கணித்துத் தன்னலத்தை, யார் பேணிக் கொள்கிறார்களோ அவர்கள் தான் சுயநலவாதிகள். இத்தகைய தன்னலம் காமராஜரிடம் எவ்வளவு தேடினாலும் அணுவளவு கூடக் கிடைக்காது. அவருடைய தலைமை தொடர்ந்து நீடித்ததற்கு இவ்விரண்டு நலமும் கலந்த பண்பே அடிப்படைக் காரணமாகும்.

குறிப்பிட்டுப் பாராட்டக் கூடிய அவருடைய மற்றொரு பெருந்தன்மை தன்னுடைய எதிராளிகளிடம் அவர் பகைமை பாராட்ட மாட்டார். எதிர்த்தவர்கள் தம்மைத் தேடி வந்தால் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று அளவளாவி

வழி அனுப்புவார். காலஞ்சென்ற அரசியல் ஞானி ராஜாஜி அவருடைய இல்லத்தைத் தேடிவருகிறார் என்றால், தன்னுடைய நண்பர்களிடம் அதைச் சொல்லி அவர்களை வேறொரு அறையில் உட்கார்த்தி விடுவார். வெளியே நின்று, ராஜாஜி வந்ததும் அவருடைய காரின் கதவைத் திறந்து அன்புடனும் பணிவுடனும் சிரித்த முகத்தோடு அழைத்துச் செல்வார். பேசி முடித்தவுடன்-பெரும்பாலும் அவர்களுடைய பேச்சில் ஒற்றுமை இருக்காது-அதே அன்புடனும் மலர்ந்த முகத்துடனும் கதவைத் திறந்து அவரை ஏற்றிவிட்டு- காரின் கதவை மூடி அவரை வழி அனுப்புவார்.

அவர்களுடைய பேச்சு இரகசியமாகவே இருக்கும். ஏதோ சிலவற்றைத் தன் நண்பர்களிடம் கூறுவார். ஆனால் அதிலே உப்பு சப்பு இருக்காது. அவரிடம் யார் வேண்டுமானாலும் அவருடைய நெருங்கிய நண்பர்களைப் பற்றிக் கூடப் புகார் சொல்லலாம். அமைதியாகக் கேட்பார். அதைப்பற்றி அவர் என்ன நினைக்கிறார் என்பதை அவருடைய முகத்திலிருந்து யாராலும் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் கிணற்றில் போட்ட கல்லைப் போல் அந்தப் புகார் அவருடைய உள்ளத்தின் ஆழத்திலேயே கிடக்கும். யாருக்கும் தெரியாமல் நண்பரைக் கண்காணிப்பார்.

இங்ஙனம் அவருடைய அரும் பெருங் குணங்களை அலை அலையாக ஓய்வில்லாமல் கூறிக் கொண்டே போகலாம். நாட்டின் தலைவருக்கு வேண்டிய முதற் தகுதி அஞ்சாமை என்பது என் எண்ணம். இத் தகுதி அவருக்குப் பிறவியிலேயே அமைந்து கிடந்தது. சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன்.

என்னுடைய நினைவு சரியாக இருந்தால்-அந்த ஆண்டு 1939. இரண்டாவது உலகப் போர் தொடங்கவில்லை. ராஜாஜி அவர்கள் சென்னை மாகாண முதல்வராக இருந்த காலம்; காமராஜருடைய நெருங்கிய துணைவர் காலஞ் சென்ற நாடிமுத்துப்பிள்ளை. காமராஜின் அன்புத் துணைவர் அன்மையில் காலஞ் சென்ற பெருந்தகை கிருஷ்ணசாமி வாண்டையார். தஞ்சையை நோக்கிக் காமராஜரும் அவருடைய இரண்டு நண்பர்களும் காரில் சென்று கொண்டிருந்தனர். அந்தி மாலையின் மெல்லிய இருள் மறைந்து விட்டது. இரவின் கனத்த இருள் பரவிக்கொண்டிருந்தது. வானுற ஓங்கிய சவுக்கு மரங்கள் இருபுறமும் வளர்ந்திருந்த ஒரு சாலையின் வழியே கார் ஓடிக்கொண்டிருந்தது. சவுக்கு மரங்களின் நிழலால் இருட்டு மேலும் முதிர்ச்சியடைந்து காணப்பட்டது. காற்றால் அசைந்த சவுக்கு மரங்கள் பேய்களைப் போல் ஓலமிட்டு ஆடிக்கொண்டிருந்தன.

சட்டெனக் கார் நின்றது. எதிரே கட்டைகளைக் கொண்டு தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருந்தது. கண் மூடிக் கண் திறப்பதற்குள் இருபது அல்லது இருபத்தைந்து பேர் கையில் கம்புடனும் பட்டாக் கத்தியுடனும் சவுக்குத் தோப்பிலிருந்து பாய்ந்து வந்தனர். அவர்களைக் கண்ட காமராஜர் அதே வேகத்துடன் காரின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்.

''என்ன உங்களை யெல்லாம் .........அவர் தானே அனுப்பினார்? (அவருடைய பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை) மரியாதையாகப் போய் விடுங்கள். அவரை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்றார். மகுடியால் கட்டுப்பட்ட நச்சரவங்கள் போல் அவர்கள் அனைவரும் வாய் மூடி மௌனிகளாய்த் திரும்பினர்.

'எங்கே போகிறீர்கள்? அந்த அடைப்பை யெல்லாம் அகற்றி விட்டுச் செல்லுங்கள்'' என்று மீண்டும் ஆவேசத்தோடு உரக்கப் பேசினார். தடை அகற்றப்பட்டது. தடையின்றிக் கார் சென்றது. நடந்த நிகழ்ச்சியைக் கேட்ட கிருஷ்ணசாமி வாண்டையார் மிகவும் வருத்தப்பட்டார். ஆனாலும் நாங்கள் சிரிக்கும் பொழுது அவராலும் சிரிப்பை அடக்க முடியாது வாய்விட்டுச் சிரித்தார்.

காந்தியடிகளிடம் காமராஜருக்கு அளவற்ற பக்தி. ஆனால் ஆண்டவன் பல சமயங்களில் தன் உண்மையான பக்தர்களை அறிந்து கொள்வதில்லை. அது போல் காந்தியடிகள் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்த போது, காமராஜரையும் அவருடைய துணைவர்களையும் கும்பல் - அல்லது சிறுகுழு என்று பொருள் படும் Clique என்ற ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தினார். காமராஜ் தன்னுடைய தேர்தல் குழு பதவியை ராஜினாமாச்செய்தார்.என்னைச் சோதித்துக் கொள்வதற்காகவே நான் ராஜினாமாச் செய்தேன் என்று இக்கட்டுரையாளரிடம் அவர் கூறியது இன்னும் பசுமையாக உள்ளது. இச்சமயத்தில் அவர் விடுத்த அறிக்கை அரசியல் ஆவணமாகப் போற்றத் தக்க ஒன்று. இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்ட வல்லபாய் பட்டேல், காமராஜரைத் தம்மைக் காணவருமாறு அழைத்தார். ஆனால் அவர் அழைப்பை மறுத்து, தானும் ஓர் இரும்பு மனிதன் தான் என்பதை நாடறியக் காட்டினார். இதற்குப் பின்னர் வல்லபாய் படேலுக்கும்-காமராஜருக்கும் இனிய உறவு ஏற்பட்டது.

இவ்வாறு அஞ்சாமையும் ஆண்மையும் பணிவும் கட்டுப்பாடும் கடமையுணர்வும் கொண்ட ஒருவர் பெருந்தலைவரானதிலே யாருக்கு என்ன வியப்பிருக்கமுடியும்?

இரக்கம் நிறைந்த உள்ளம். ஆனால் வைரம் பாய்ந்த உள்ளம். தவறு செய்தவர்கள், தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டால் மனதார மன்னித்து விடுவார். மிகவும் நாணயமானவர் என்று பெயர் பெற்ற ஒரு பெரிய அலுவலரை அவர் ஓய்வு பெற்ற பின் ஒரு வேலையிலே அமர்த்தினார். ஆனால் அவரோ அவருடைய நம்பிக்கையைப் பொய்யாக்கி விட்டார். கையூட்டுப் பெற்றார். முதல் அமைச்சராக இருந்த காமராஜர், அவரை உடனே வரச்சொன்னார்; அவ்வதிகாரியோ, சற்றும் எதிர்பாராமல் நெடுஞ்சாண் கிடையாக வந்து விழுந்து அவரது கால்களைப் பற்றிக் கொண்டு, மன்னிப்பை வேண்டினார். பெருந்தன்மையாக அவரை மன்னித்து விட்டார் காமராஜர்.

மற்றுமொரு ஊழல் மன்னன் தன்னைக் காப்பாற்றா விட்டால் அவருடைய வீட்டிலேயே உயிரை விடுவேன் என்று மிரட்டினான். ''தாராளமாக உயிரைவிடு'' என்று சொல்லி மேல் மாடிக்குப் போய் விட்டார். மிரட்டியா அவரைப் பணியவைக்க முடியும்? அதுவும் தவறு செய்தவனிடமா அவர் பணிவார்? அவருடைய ரத்தத்தில் அச்சமென்பதை அணுவளவு கூடக் காணமுடியாது.

தேசத் தொண்டனாக வாழ்க்கையைத் தொடங்கிய காமராஜருக்குத் தொடக்கத்தில் காந்தியடிகளின் ஆசியோ, ஜவகர்லால் நேருவின் துணையோ வல்லபாயின் ஒத்துழைப்போ ஏனைய பெருந்தலைவர்களின் அரவணைப்போ ஏதும் இல்லை. அதற்கு மாறாக அவர்கள் வேறொரு தலைவரை முழு மனத்தோடு ஆதரித்து நின்றனர். அங்ஙனமிருந்தும் காமராஜர் தன்னிகர் இல்லாத் தலைவராய்-மாபெருந்தலைவராய்மலர்ந்தார் என்றால் அவருடைய பெருமைக்கும், ஆற்றலுக்கும், அணி வகுக்கும் திறமைக்கும், மக்களிடையே அவருக்கிருந்த செல்வாக்கின் பெருமைக்கும் வேறென்ன சான்று காட்டிப் பேச வேண்டும்? இவ்வகையில் எளிய குடும்பத்தில் பிறந்து உயர்ந்த நெப்போலியனைத்தான் அவருக்கு இணையாகக் கூற முடியும்.

## ஓவியக்கலை வளர்ச்சிக்கு

# ஒரு நுண்கலைக் குழு

ஆய கலைகள் என்று சொல் லப்பட்டு வரும் அறுபத்து நான்கு கலகைளுள் ஓவியக் கலையும் ஒன்று.

நமது நாட்டில், ஓவியத்தை, அனைவரும் கண்டு வியந்து பாராட்டி வருகிறார்கள்.

இந்த நவீன காலத்தில், கடற் கரைச் சாலையிலும், ஏனைய முதன்மைச் சாலைகளிலும் நடை பாதைகளிலும் கரித்துண்டு, சாக் பீஸ் கட்டி ஆகியவற்றின் துணை கொண்டு ஓவியம் தீட்டும் ஓவி யர்கள் பலர் பெருகியுள்ளனர்.

தமிழகத்தில் வெளிவரும் பல புதிய ஏடுகள் 'இந்த இந்த ஓவி யர்களின் ஓவியங்களுடன் எமது இதழ் வெளிவருகிறது' என்று விளம்பரம் செய்யும் சூழ்நிலை உருவாகியுள்ளது. பல ஏடுகள், கதைக்குரிய ஓவியங்களை மிகச் சிறப்பாக வெளியிட்டு வருகின் றன.

நெடுங்காலமாகவே உயர் நிலைப் பள்ளிகளில் மாணவர் களுக்கு ஓவியம் கற்பிக்கப்பட்டு வருகிறது. வாரத்துக்கு இரண்டு முறையாவது ஓவிய வகுப்பு நடை பெறுகிறது. ஓவியத்தைக் கற் பிக்க ஓவிய ஆசிரியர்கள் (Art Masters) உள்ளனர். மாண வர்களில் பெரும்பான்மையோ ருக்கு, ஓவிய வகுப்பு எட்டிக் காயாகக்கசந்தாலும், ஒரு சிலருக் குக் கற்கண்டாக இனிப்பதுண்டு.

தமிழ்நாட்டில் ஓவியம், கைத் திறன் ஆகியவற்றைப் பயிற்று விக்கச் சென்னையிலும் கும்ப கோணத்திலும் ஓவியக் கல்லூரி கள் உள்ளன. இவை ஓவியக்கலை யைக் கற்கும் மாணவர்களுக்கு ஓவிய வகுப்புகளை நடத்தி அவர் களது தேர்ச்சியை ஆய்வு செய்து அவர்களை ஓவியக் கலைஞர் களாக்கி உலா வரச் செய்கின்றன.

### ஓவியம் நுண்கலைக்குழு


அவ்வாறு பயிற்சி பெற்ற ஓவி யர்களின் கலைத் திறமையையும், சொந்த முயற்சியால் ஓவியம் தீட்டுவோரின் ஆற்றலையும் ஊக்குவிப்பதற்குத் தமிழ்நாட்டில் ஒரு குழு உள்ளது. அதுதான் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு ஆகும்.

சென்னை எழும்பூரில் உள்ள அரும்பொருட் காட்சியக எல் லைக்குள் உள்ளது இக்குழுவின் அலுவலகம். இக்குழு தன்னு ரிமை பெற்ற நிறுவனமாகும். இது 1975-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் துவக்கம் செய்யப்பட் டது. மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு செ. அரங்க நாயகம் அவர்களைத் தலைவ ராகக் கொண்டு இயங்கும் இக் குழுவில் திரு சி. ஆர். பட்டாபி ராமன் துணைத் தலைவ ராகவும், கல்வித் துறையின் துணைச் செயலர் திரு ஆளுடைய பிள்ளை பொருளாளராகவும், அரசுத் துறையைச் சார்ந்த திரு சுந்தர பாபு உறுப்பினர் செய லாளராகவும் உள்ளனர். குழு வின் பொதுக்குழு பதினோரு உறுப்பினர்களைக் கொண்டது. ஏழு பேர் கொண்ட நிருவாகக் குழு ஒன்றும் உள்ளது.

ஓவியம் நுண்கலைக் குழு ஓவி யக் கலையின் வளர்ச்சிக்கு மிக வும் உறுதுணையாக உள்ளது. இக்குழு மத்திய குழுவான லலித கலா அகாடமியுடன் இணைந்து செயல் புரிகிறது. ஆண்டொன் றிற்குத் தமிழக அரசிடமிருந்து சுமார் 1.5 இலட்ச ரூபாய் நிதி உதவி பெற்று, ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் ஓவியக் கண்காட்சி களை நடத்தி வருகிறது. கண் காட்சியில் தேர்ந்தெடுக்கப் பெறும் சிறந்த ஓவியங்களுக்கு ரொக்கப் பரிசும் வழங்குகிறது இக்குழு.



ஓவியர் கே. மாதவன்



ஓவியர் எச். வி. ராம்கோபால்

## ஆண்டுக் கண்காட்சி

1976-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாளன்று முதலாவது ஓவியக் கண்காட்சியையும், 1978-ஆம் ஆண்டு இரண்டாவது கண்காட்சியையும் 1979-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மூன்றாவது கண்காட்சியையும் இக்குழு சென்னையில் நடத்தியது. 1976-ல் 6 ஓவியர்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதமும், 6 ஓவியர்களுக்கு 500 ரூபாய் வீதமும் பரிசளித்துச்சிறப்பித்தது. 1978ல் நடைபெற்ற கண்காட்சியின் போது 10 ஓவியர்களுக்கு 1000 ரூபாய் வீதம் பரிசளித்தது. 1979-ல் நடைபெற்ற கண்காட்சியின் போது 7 ஓவியர்களுக்கு 1500 ரூபாய் வீதம் ரொக்கப் பரிசு அளித்தது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.




ஓவியர் திரு கே. மாதவனின் மனைவி திருமதி பங்கஜாக்சி அம்மாள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து பரிசுத் தொகை பெறுகிறார்.

போட்டிக்கு வரும் ஓவியங்களையும், சிற்பங்களையும் நியமிக்கப்பெற்ற நீதிபதிகளின் குழு ஆய்வு செய்து, கண்காட்சியில் இடம் பெறுவதற்குரிய ஓவியங்களையும் அவற்றுள் பரிசுக்குரிய தகுதி பெற்ற ஓவியங்களையும் தேர்ந்தெடுக்கிறது. மாநில அளவில் நடத்தப் பெறும் இந்தக் கண்காட்சியில் பங்குபெறும் ஓவியர்களின் எண்ணிக்கையும் ஓவியங்களின் எண்ணிக்கையும் ஆண்டு தோறும் அதிகரித்து வருகின்றன.

## புயல் நிதிக்கு ஓவியர்கள் வழங்கிய நன்கொடை

சென்ற ஆண்டு (1978) தமிழகத்தில் புயலும் வெள்ளமும் பெருஞ்சேதத்தை ஏற்படுத்திய போது நாடே முனைந்து வந்து பல்வேறு வகை நிவாரண உதவிகளைச் செய்து வந்தது. அந்த மாபெரும் பணிக்கு, ஓவியம் நுண்கலைக் குழுவும் தன்னால் இயன்ற பொருளாதார உதவியை வழங்கியது. சென்னை நகரிலும், உதகமண்டலத்திலும் சிறப்பு ஓவியக் கண்காட்சியை ஏற்பாடு செய்தது. கண்காட்சியில் பங்கு பெற்ற திரு எஸ்.பி. ஜெயகர், திரு வி. ஜெயராமன், திருமதி ராஜகுமாரி முத்தையா, திரு சோமசுந்தரம், திரு கே. அடையாறு ஸ்ரீனிவாசலு, திரு விஜயவேலு ஆகிய ஓவியர்களின் ஓவியங்களை விற்றதால் கிடைத்த தொகையான 2080 ரூபாயை முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கியது.

## ஓவியர் முகாம்

ஆண்டுதோறும் ஓவியர்களின் முகாம் ஒன்றை இக்குழு நடத்தி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஓவியர்களும் பிற மாநிலத்து ஓவியர்களும், ஓவியக் கலைத் திறன் ஆய்வாளர்களும் இந்த முகாமில் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர். முதல் முகாம் உதகமண்டலத்தில் 1978-ஆம் ஆண்டில் நடைபெற்றது. கர்நாடக மாநிலத்திலிருந்தும் கேரள மாநிலத்திருந்தும் ஓவியர்கள் இந்த முகாமிற்கு வந்திருந்தனர். இந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் இரண்டாவது முகாம் நடைபெற்றது. இதில் பங்கு பெற்ற பிற மாநிலங்கள்; மேற்கு வங்காளம், டில்லி.

முதலாவது முகாமைப் பார்வையிட்ட தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு மனோகரன் அவர்கள் பதிவேட்டில் புகழ்ந்து குறிப்பிட்டிருக்கிறார். அது வருமாறு:

'' ஓவியக் கண்காட்சியைப் பார்த்தேன். ஓவியக்கலை நிபுணர்களின்-கலை வல்லுனர்களின் தனித்தன்மை மிக்க - மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்திடும் திறமை மிக்கவர்களை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை எண்ணி மகிழ்ச்சி கொண்டேன்.

''திறமை மிக்க இந்த ஓவியங்களுக்கு அரசுத் தரப்பின் ஆதரவு பெரிதும் தேவை. ஊக்கமும் ஆக்கமும் அரசு அளிக்க வேண்டும். அப்படியானால்தான் புதையுண்டு கிடக்கும் கலையுணர்வு முழுமை பெறும்''

## ஓவியர்களுக்கு உதவித்தொகை

ஓவிய நிறுவனங்களை நடத்தி வருபவர்களுக்கு இக்குழு உதவி அளித்து வருகிறது. திறமை மிக்க ஓவியக் கலைஞர்களுக்கு-அவர்கள் ஓவிய நிறுவனங்களில் பயிற்சி பெறும் காலத்தில் மாதம் ஒன்றிற்கு 150 ரூபாய் வீதம் 10 மாதத்திற்கு நிதி உதவி தருகிறது. 1976-77ல் 6 பயிற்சியாளருக்கும், 1977-78ல் 10 பயிற்சியாளருக்கும், 1978-79ல் 10 பயிற்சியாளருக்கும் இக்குழு உதவித்தொகை வழங்கியிருக்கிறது. ஓவியக்கலை மாணவர்கள் ராஜஸ்தான் சென்று அங்குள்ள ஒரு வகை வண்ண ஓவியம் தீட்டும் பயிற்சி பெறுவதற்கும் பண உதவி செய்கிறது.

## மாவட்டங்களில் ஓவியக் குழு

மாவட்டங்களில் ஓவியக் கலை இயக்கத்தை வளர்க்கும் வகையில் மாவட்டங்களில் உள்ள மையங்களை இக் குழு ஊக்குவித்து வருகிறது.

திருச்சி, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள ஓவிய மையங்கள், இக்குழுவின் நிதி உதவியுடன் வளர்ந்து வருகின்றன. கோயம்புத்தூரிலும் ஓவியக் கலை மையம் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையங்கள் எல்லாம் ஓவியக் கலையைக் கற்றுக் கொள்ள வாய்ப்புகளையும் வசதிகளையும் செய்து தருகின்றன.

## ஓவிய ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சிக் கூடங்கள்

பள்ளிக் கல்வி இயக்ககத்தைச் சேர்ந்த தொழிற்கல்விப் பிரிவின் ஒத்துழைப்புடன், குறிப்பிட்ட சில நகரங்களில் 15 நாட்களுக்குத் தனிப் பயிற்சிக் கூடங்களைத் துவக்கலாம் என இக்குழு திட்டமிட்டுள்ளது. பள்ளிகளில் பணி புரியும் ஓவியக் கலை ஆசிரியர்களுக்கு இந்தத் தொழிற்கூடத் திட்டம் தக்க பயிற்சி வழங்க உத்தேசித்துள்ளது. இங்கு பயிற்சி பெறும் ஓவிய ஆசிரியர்கள் தாங்கள் பெறுகின்ற அனுபவ அறிவின் உதவியால், ஓவியக்கலையின் நவீன அணுகு

முறைகளையும், நுணுக்கங்களையும் மாணவர்களிடையே தக்க வகையில் பரப்புவார்கள் என்று இக்குழு கருதுகிறது.

**ஓவிய விற்பன்னர்களுக்குப் பாராட்டுப் பரிசுகள்**

நமது மாநிலத்தில் ஓவியக் கலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வரும் புகழ்மிக்க ஓவியர்களைப் பாராட்டும் வகையில் அவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தை இக்குழு மேற்கொண்டுள்ளது. இந்த ஆண்டு (1979) ஓவியக் கண்காட்சியின் துவக்க விழாவில் மறைந்த மாபெரும் ஓவிய விற்பன்னர்களான திரு கே. மாதவன், திரு எச்.வி. ராம்கோபால் இருவரையும் சிறப்பிக்கும் வகையில் அவர்களின் குடும்பத்தாருக்கு செப்புப் பட்டயமும் 5000 ரூபாயும் இக்குழு வழங்கியது.



ஓவியர் திரு எச். வி. ராம் கோபாலின் மனைவி திருமதி சாந்தா, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து பரிசுத் தொகை பெறுகிறார்.

**''ஓவியர் சிற்றூர்''**

ஓவியர்களுக்கு என ஒரு சிற்றூர் அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை இக்குழு உணர்ந்திருப்பதால், அந்த முயற்சியில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள நஞ்சை நாடு என்னும் கிராமத்தில் ஏறக்குறைய 68 ஏக்கர் நிலப்பரப்பில் ஓவியர்களின் சிற்றூரை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் உள்ளங்களைக் கவரும் உதகமண்டலத்தில் கோடை விழாவின் போதும் மாமல்லபுரத்தில் பொங்கல் விழாவின் போதும் ஓவியக் கண்காட்சிகளை ஆண்டுதோறும் நடத்திப் பொது மக்களின் பாராட்டை அதிக அளவில் பெற்று வருகிறது இக்குழு.

**இடைமாநில ஓவியக்கலைக் கண்காட்சி (Inter State Exchange of Art Exhibition)**

இடைமாநிலக் கண்காட்சித் திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு ஆந்திர மாநிலத்துத் தலைநகரான ஐதராபாத் நகரில் இக் குழு 'ஆண்டு ஓவியக் கண்காட்சியை' நடத்திப் பெரும் பாராட்டைப் பெற்றது.

**இடைமாவட்ட ஓவியக்கலைக் கண்காட்சி (Inter District Exchange of Art Exhibition)**


மாவட்டம் தோறும் உள்ள ஓவியக் கலைஞர்களுக்கு மேலும் ஊக்கமூட்டும் வகையில் இடைமாவட்ட ஓவியக்கலைக் கண்காட்சிகளை மாவட்டத் தலைநகரங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பிறநாட்டு ஓவியக் கண்காட்சி**

வெளிநாட்டுக் கலாச்சாரக் குழுக்களின் கலை நிகழ்ச்சிகள் நமது தமிழகத்தில் நடைபெறுவதற்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எவ்வாறு உதவி செய்து வருகிறதோ, அதைப் போலவே, வெளிநாட்டு ஓவியர்களின் ஓவியக் கண்காட்சி அவ்வப்போது சென்னையில் நடைபெறுவதற்கு இக்குழு தன்னால் இயன்ற ஒத்துழைப்பை நல்கி வருகிறது. 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அங்கேரி நாட்டுக் கலைக் கண்காட்சி (Tapestry Exhibition) ஒன்றை நடத்தியது. 1977 ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டு ஓவியர்களின் ''வாஸ்ரேலியும் அவரது நண்பர்களும்'' (Vasarely and his friends) என்ற ஓவியக் கண்காட்சியைத் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு மிகச் சிறப்பாக நடத்திக் காட்டியது.

இவ்வாறு ஓவியக் கலையின் வளர்ச்சிக்கு அடக்கத்துடனும் ஆர்வத்துடனும் தொண்டாற்றுவதன் மூலம் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு, ஒப்பற்ற பணியைப் புரிந்து வருகிறது என்பது 'உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை'.

—தமிழ்ப்பித்தன்



# சிறைச்சாலைச் சீர்திருத்தங்கள்



தமிழ்நாடு அரசு, மத்திய அரசு நிதி உதவியின் கீழ் இம்மாநிலத்திலுள்ள சிறைகளைச் சீர்படுத்துவதில் அக்கறைகாட்டி வருகின்றது. நேரடிக் கழிப்பிடங்கள் அமைத்தல், உணவறை கட்டுதல் மின் இணைப்புப் பொருத்துதல், சிறைக் கட்டடங்களைச் நவீன காற்றோட்ட முறையில் அமைத்தல், தண்ணீர் விநியோகம், பழைய கட்டடங்ளை சீர்படுத்துதல் முதலியவற்றிற்கு இவ்வரசு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

1977-78-ஆம் ஆண்டில் கூனூர், திருமயம், அறந்தாங்கி, பவானி, முதுகுளத்தூர், தாராபுரம், ஜெயம்கொண்டம், பாபநாசம், பொள்ளாச்சி, ஆரணி, வாலாசாப்பேட்டை, மன்னார்குடி, இராசிபுரம், நாங்குநேரி, பொன்னேரி, போளூர், செங்கம், சிதம்பரம், சங்ககிரி, பொறையார், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, திருக்கோயிலூர், பரமக்குடி, திருப்பத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்), இராமநாதபுரம் ஆகிய 26 கிளை சிறைச்சாலைகளுக்கும், கொக்கிரக்குளம் தனிச் சிறைச்சாலைக்கும் நேரடிக் கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இதற்கு ரூபாய் பத்து இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 50 சதவீதம் மானியமாகவும், கடனாகவும் வழங்கியுள்ளது.

1978-79ஆம் ஆண்டிலும் ரூ. 10,82,100 மேற்கண்ட இனங்களுக்காக அனுமதித்துள்ளது.

இவ்வரசு எல்லாச் சிறைச்சாலைகளிலும் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும் பொருட்டு சீரிய திட்டங்களைத் தீட்டியுள்ளது. 1978-79-ஆம் ஆண்டில் சுகாதாரம், தண்ணீர் விநியோகம் ஆகியவற்றிற்காக ரூ. 19,47,700 செலவழிக்க அனுமதித்துள்ளது.

**சிறைத் தொழில்களின் முன்னேற்றம் :**

இம்மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகளிலுள்ள தொழிற்கூடங்களைச் சீரமைக்கவும் நவீனப்படுத்தவும் மத்திய அரசின் நிதி உதவியின் கீழ் 1977 ஆண்டிலிருந்து 1978 வரை கணிசமான தொகையை இவ்வரசு செலவழித்து வந்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மத்தியசிறைச்சாலைக்கு தொழில் இயந்திரங்கள் வாங்க ரூபாய் 12 இலட்சம் அனுமதித்துள்ளது.


1978-79-ஆம் ஆண்டில் கோவை மத்திய சிறையில் உள்ள தொழிற்சாலைக்குப் புதிதாக விசைத்தறிகள் வாங்கவும், தற்போது இருக்கும் விசைத்தறிகளைச் செப்பனிடவும், மற்றச் சிறைகளில் தற்போதுள்ள கைத்தறிகளைப் பழுதுபார்க்கவும் ரூ. 8.50 இலட்சம் நிதி அளித்துள்ளது. இதற்காக மத்திய அரசு ரூ. 4.25 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

**சிறைச் சாலைகள் சீர்திருத்த ஆணைக்குழு :**

சிறைகள் சீரிய முறையில் செயல்படவும், சிறைவாசிகளுக்குத் தேவையான வசதிகளைப் பெருக்கவும், சிறைச்சாலைக் கட்டடங்களைச் சீர்படுத்தவும் அரசியல் கைதிகளை நடத்தும் விதம் போன்றவற்றை ஆய்ந்து அரசுக்குப் பரிந்துரை கூறவும், பாட்னா உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. ஆர். எல். நரசிம்மன் அவர்களின் தலைமையில் சிறைச் சீர்திருத்த ஆணைக்குழுவினை ஏற்படுத்தியது. அக்குழு தனது பரிந்துரைகளை 28-4-79 அன்று அரசுக்கு வழங்கி உள்ளது. பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து நடைமுறைப்படுத்தும்.

## காவல் நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்பு

தமிழ்நாட்டில் 872 காவல் நிலையங்களும் 181 புறக்காவல் நிலையங்களும் (1053) உள்ளன. இவைகளில் 760 காவல் நிலையங்களுக்கும் 87 புறக் காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி இணைப்புகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் 112 காவல் நிலையங்களுக்கும் 94 புறக்காவல் நிலையங்களுக்கும் (206) தொலைபேசி இணைப்பு அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.





# விரிவாகும் வீட்டு வசதி வாரியம்

வீட்டு வசதி வாரியம் 1946-ஆம் ஆண்டு நகர வளர்ச்சிக் கழகம் என்று ஒரு சிறு வீடுகட்டும் நிறுவனமாகச் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1961-ஆம் ஆண்டு ஆண்டொன்றிற்கு ரூ. 20 கோடிக்கு மேல் செலவு செய்து மாநிலம் முழுவதிலும் செயல்படும் ஒரு பொது நிறுவனமாக மலர்ந்தது.

வீடுகள் கட்டுதல் மட்டுமின்றி வீட்டு வசதி வாரியம், வீடுகள் கட்டும் திட்டங்கள் மூலம் கட்டடச் செலவைக் குறைப்பதற்காகத் தொன்றுதொட்டு உபயோகிக்கும் பல்வேறு கட்டடப் பொருள்களுக்குப் பதில் புதிய உத்திகளைக் கடைப்பிடித்து மாற்றுப் பொருட்களை உபயோகிப்பதில் தனியார் நிறுவனங்களுக்கு ஒரு முன்மாதிரியாகச் செயல்பட வேண்டும். இதுவே வீட்டு வசதி வாரியத்தின் குறிக்கோள் ஆகும்.

சென்னை நகரம் மட்டுமல்லாமல் மற்ற மாவட்டங்களிலும் வீட்டு வசதி வாரியம் அதன் செயல்களை மதுரை, திருச்சி, கோவை, சேலம், ஈரோடு மற்றும் வேலூர் போன்ற நகரங்களில் வாரியத்தின் கிளைகளை அமைத்து விரிவாக்கியுள்ளது. சென்னை நகரத்திலும் வட்டார முறையில் 13 கோட்டங்களாகப் பிரித்து வேலைகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

**நிலம் மேம்படுத்தும் திட்டம்.**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முக்கிய பணி, நகரங்களில் அருகாமையிலுள்ள நிலங்களைக் கையகப்படுத்தி, அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மேம்படுத்தி, நகர அமைப்பு விதிகளின்படி பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்காகவும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காகவும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்காகவும் வீட்டு மனைகளாக ஒதுக்கீடு செய்வதேயாகும்.

வீட்டு வசதி வாரியம் சென்னை நகரத்திலுள்ள அறிஞர் அண்ணாநகர், கே.கே.நகர், அசோக் நகர், தென் சென்னைப் புற நகர், திருவான்மியூர், கொரட்டூர், வியாசர்பாடி ஆகிய இடங்களிலும் மற்றும் கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, வேலூர் ஆகிய இடங்களிலும் புறநகர் திட்டத்தை மேம்படுத்தி உள்ளது. நடப்பு ஆண்டில் (1979-80) நிலத்தைக் கையகப்படுத்தி மேம்படுத்தும் திட்டத்திற்காகச் சுமார் ரூபாய் 249.90 இலட்சங்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதுவரை வாரியம் 4586 ஏக்கர் நிலப்பரப்பை மேம்படுத்தி உள்ளது.

**பின் தங்கியவர்களுக்கு வீட்டு வசதி**

இந்தத் திட்டம் முக்கியமாக, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகிறது. இவர்களுடைய ஆண்டு வருமானம் ரூபாய் 4200க்கு அதிகமாக இருக்கக் கூடாது. மொத்தமாக நிலத்தைக் கையகப்படுத்தி வீட்டு மனைகளாகப் பிரித்து வைத்து இருப்பவர்கள், வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்ட விரும்பினால், அம்மாதிரி திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வீட்டின் மொத்த விலையில், ஒதுக்கீடுதாரர்கள், வீடு ஒதுக்கீடு செய்யும் சமயத்தில், மொத்த விலையில் 10 சதவீதம் முன் வைப்புத் தொகையாகவும், மீதியை 20 ஆண்டு மாதத் தவணையாகவும் கட்ட வேண்டும்.

இந்தத் திட்டம் செயல்படுத்துவதற்குச் சொற்பமான நிபந்தனைகளில் வீட்டு வசதி புறநகர் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து முதலீடு பெறப்படுகிறது.

இந்தத் திட்டத்தில் இதுவரை 7622 வீடுகள் கட்டப்பட்டு, ரூ. 690.34 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1979-80ல் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 68.11 இலட்சங்கள் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டு, 1800 வீடுகள் எல்லா இடங்களிலும் தேவைகளின் அடிப்படையில் கட்டப்படவிருக்கின்றன.

மாநில அரசு ஊழியர்களுக்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மாநிலத்தின் எல்லா இடங்களிலும் அடுக்கு வீடுகள் கட்டியுள்ளது. இம்மாதிரி வீட்டு வசதி அளிக்கப்பட்டவர்களிடமிருந்து அவர்களது வீட்டு வாடகைப்படி போகக் குறைந்த வாடகை வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக இதுவரை ரூ. 1384.55 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1979-80ல் 1400 வீடுகள் கட்டப்பட உத்தேசிக்கப்பட்டு, இதற்காக ரூ. 250 இலட்சங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி**

இத்திட்டம் ஆண்டு வருமானம் ரூ. 7200க்கு மேற்படாத குறைந்த வருவாயிலுள்ளவர்களுக்காகத் தீட்டப்பட்ட திட்டமாகும்.

இத்திட்டத்தில் இதுவரை 11956 வீடுகள் கட்டப்பட்டு, ரூபாய் 2078.10 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1979-80ல் 4,500 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு அதற்காக ரூ. 54.12 இலட்சங்கள் இந்நடப்பு ஆண்டு வரவு

செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன.

**தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித்திட்டம்**

தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் விரைவான தொழில் வளர்ச்சி ஏற்பட்டதன் விளைவாக, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்களில் பெரும்பாலோருக்குச் சொந்த வீடு இல்லை. மேலும், அவர்கள் வேலை செய்யும் இடத்திற்கு வெகு தூரத்திலிருந்து வருகின்றார்கள். எனவே, வேலை செய்யும் இடங்களுக்கு அருகிலேயே தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் பொருட்டு இத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

டிக் கொடுக்கப்படுகிறது. மேலும் வாரியத்தால் கட்டும் அடுக்கு வீடுகளும் தவணை முறையில் விற்கப்படுகிறது.

இதுவரை இத்திட்டத்தில் 7322 வீடுகள் கட்டப்பட்டு, இதற்கான ரூ. 2558.20 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1979-80ல் 2400 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு ரூ. 4.94 இலட்சங்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் :**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 500 ஏக்கர் நில பரப்பளவில் ரூ. 255 இலட்ச மதிப்பீட்டில் மறைமலைநகர் என்ற இடத்தில் மேம்படுத்தும்



543 வீடுகள் கட்டும் வேலையை எடுத்துக் கொண்டுள்ளது.

வீட்டு வசதி வாரியம் கட்டடச் செலவை உயராமல் பார்த்துக் கொள்கிறது. இம்முயற்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமானது, மத்திய அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம், மத்திய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அமைப்புகளுடனும், தேசிய கட்டட நிறுவனம், இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் போன்ற அமைப்புகளுடனும்



இதுவரை இத்திட்டத்தில் 2494 குடியிருப்புக்கள் கட்டப்பட்டு, ரூ. 52.03 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டான 1979-80ம் 100 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு, அதற்காக ரூ. 20 இலட்சங்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி**

ஆண்டு வருமானம் ரூ. 7200க்கு மேல், ரூ. 18,000க்குட்பட்டு இருப்பவர்களுக்கு வீட்டு வசதியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். வாரியத்தால் ஒதுக்கப்பட்ட மனைகளில் வீடுகள் கட்

திட்டங்களைத் துவக்கியுள்ளது. வீட்டு வசதி வாரியத்தினிடம் சாலை போடுதல், மழைநீர் வடிகால் அமைத்தல், சிறுபாலம் அமைத்தல் போன்ற மேம்படுத்தும் வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தால் 490 ஏக்கர்நிலப் பரப்பில் திட்டமிடப்பட்டுள்ள மற்றொரு மேம்படுத்தும் திட்டம், மணலி என்ற இடத்திலாகும். இதற்கான 212 ஏக்கர் நிலத்தில் மேம்படுத்தும் திட்ட வேலைகள் வீட்டு வசதி வாரியத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக வீட்டு வசதி வாரியம்

நெருங்கிய தொடர்புகொண்டு உழைத்து வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முன்னேற்றத்தைப் புரிந்து கொண்டு நாடு முழுவதிலுள்ள ஆராய்ச்சியாளர்களும், தொழில் நுட்பறிவாளர்களும் பெரும் பாராட்டுதல்களை வழங்கியுள்ளனர்.

வாரியம் கட்டடம் கட்டுவது மட்டுமல்லாமல், நிர்வாகத்திலும், உற்பத்தியிலும் புதிய நடை போட்டுத் திறமையைக் காட்டியுள்ளது. எண்ணூரிலுள்ள 'செல்கிரீட்' உற்பத்தியிலும், மர வேலையிலும் உச்ச நிலைமையை அடைந்துள்ளது.

# திரை உலகுக்கு மறுவாழ்வு!

தமிழ்த் திரைப்படத் துறை, ஆங்கிலம், இந்தி, மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னடப் படங்களின் கடுமையான போட்டியால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புவரை நலிந்துபோன நிலையில் இருந்ததால், அதற்கு வலிவு ஊட்டி வளர்க்க தமிழ்நாடு அரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்தியுள்ளது. இதனால் தமிழ்த் திரைப்பட உலகம் புத்துணர்ச்சியும், புது வேகமும் பெற்று வளர்ச்சி அடைந்துள்ளது.

தமிழ்த் திரைப்படங்களுக்குப் போதிய நல்ல திரையரங்குகள் கிடைக்க வழி செய்யும் நோக்குடன் எப்போதும் பிறமொழிப் படங்களையே திரையிட்டு வரும் திரையரங்குகளில், கட்டாயமாக ஆண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்ப்படங்களைத் திரையிட்டாக வேண்டுமென்று புதிய திருத்தம் கொண்டுவரப்பட்டது.

தற்போது, தமிழ்த் திரைப் படங்களின் வெளியீட்டு எண்ணிக்கைக்கு ஈடு கொடுக்கப் போதிய அளவு திரையரங்குகள் இல்லாத நிலையைப் போக்க, குறைந்த முதலீட்டில் திறந்த வெளித் திரையரங்குகளும், டூரிங் திரையரங்குகளும், செமி பர்மனென்ட் திரையரங்குகளும் அமைக்கச் சட்டப்படி அனுமதி வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தவிர்த்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகரக்காவல்துறை ஆணையர் ஆகியோர் இதுபோன்ற அனுமதி மனுக்களின் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்பட்டது.

திரையரங்குகளுக்கு, கட்டட உறுதிச் சான்றிதழ் மற்றும் மின் சான்றிதழ் ஆகியவைகளை வழங்குவதில் உள்ள கால தாமதங்களையும் சிரமங்களையும் தவிர்க்க நடவடிக்கை எடுப்பதுடன், நடைமுறை உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

'டூரிங்' திரையரங்குகளின் உரிமக் காலத்தை $2\frac{1}{4}$ ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளாகவும், ஓரளவு நிலையான (Semi Permanent) திரையரங்குகளை நிறைவான திரையரங்குகளாக மாற்றுவதற்கான கால அளவை 5 ஆண்டிலிருந்து 7 ஆண்டாகவும், காலநீட்டிப்புச்செய்துள்ளது. மேலும், கிராமப் புறங்களிலுள்ள ஓரளவு நிலையான திரையரங்குகளுக்கு, நிலையாக இயங்க அனுமதி வழங்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

பெரும்பாலும் கிராமப் புறங்களில் அமைந்துள்ள'டூரிங்' திரையரங்குகளில் சில, நிபந்தனைக்குட்பட்டு, சில நாட்களில் பகல் காட்சிகள் நடத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குளுமைத் திரையரங்குகள், மின்சார வெட்டுக் காலங்களில் குளிர்சாதன வசதி செய்யாவிடில் அவை சாதாரணத் திரையரங்குகளைப் போலவே குறைந்த அனுமதிக் கட்டணங்களைத்தான் வசூலிக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்தகு நல்ல முடிவுகளினால், திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அரசுக்கு வருவாயும், ஏழை எளிய மக்களுக்குப் பொழுதுபோக்கு வசதியும் பெருகியுள்ளது.

திரையரங்குகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் 1957-ஆம் ஆண்டின் தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குபடுத்தல்) விதிகள் நடைமுறைத் தேவைக்குத் தக்கவாறு திருத்தப்படுவதுடன், பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு திரைப்பட அரங்குகள் சுத்தமாகவும், விதிகளில் கண்டவாறு வசதிகள் கொண்டதாகவும் இருக்கவேண்டுமென்பதற்காக அடிக்கடி நேரில் பார்வையிட்டு எச்சரிக்கப்பட்டுள்ளன.

சென்னை போன்ற மாநகரங்களில் ஒரே பகுதிகளில் திரையரங்குகள் நெருக்கமாக உருவாவதைத் தடுக்கவும், பரவலாகப் பொதுமக்கள் தாங்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே திரைப்படங்களைக் காணும் வசதிகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கிலும், புதிதாக அமையும் நகர்ப் பகுதிகளில் வசதிமிக்க சிறிய திரை அரங்குகள் அமைப்பதை அங்கீகரிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

தமிழ்த்திரைப்படத் தணிக்கை முறையில் சென்னையிலுள்ள தணிக்கைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் திரைப்படத் துறை பற்றிப் போதிய அறிவும் அனுபவமும் இல்லாதவர்களாக அமையக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டி, மாநில அரசைக் கலந்தாலோசித்து அக்குழுவை மாற்றியமைக்க வேண்டும் என மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

தமிழ்த் திரைப்படங்களில் வெறுக்கத்தக்க, பண்பாடற்ற, ஆபாசக் காட்சிகள் இடம்பெற அனுமதிக்கக் கூடாது என்றவகையில் இவ்வரசின் கருத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் பிற நகரங்களில் ஆபாசத் திரைப்படச் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடை செய்யவும், திரைப்படச் சுவரொட்டிகளைத் தணிக்கை செய்யவும் சட்டமியற்றும் கருத்து அரசின் ஆய்வில் உள்ளது.

# வனவளம் பெருக்குவோம்!

வனத்துறையின் காடு வளர்ப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் கிராமப்புறப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு விறகுகளை வழங்குவதுடன் தொடர்ந்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதையும் குறிக்கோள்களாகக் கொண்டுள்ளன. மேலும், காட்டிலும் காட்டைச் சுற்றிலும்வாழும் பழங்குடி இன மற்றும் மலை வாழ் மக்களுக்கு இடைவிடாமல். வேலைகளை அளிக்கவும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

காடுகளிலிருந்து 1977–78ஆம் ஆண்டில் ரூ. 1,051.59 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. இதில், ரூ. 434.79 இலட்சம் வருவாயை சந்தன மரங்கள் தந்து, வனத்துறையின் வருவாயில் பெரும் பங்கு பெற்றுள்ளன. மரமும் விறகும் 204.42 இலட்ச ரூபாயை வருவாயாகத் தந்துள்ளன. 1978–79-ல் காடுகளிலிருந்து ரூ. 868.49 இலட்சமும், 1979–80-ல் ரூ. 925.48 இலட்சமும் வருவாயாகக் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பண்ணைக்காடுகள்.**

சிற்றூர்களில், அரசாங்க புறம்போக்கு நிலங்களிலும், தரிசாகக் கிடக்கும் நிலங்களிலும் பொருத்தமாகவுள்ள இடங்களில் காடு வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1978–79-ல் 9,000 ஹெக்டேர் பரப்பில் ரூ. 48.30 இலட்சம் செலவில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 1979–80-ம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 44.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 18,040 ஹெக்டேர் பரப்பில் கிராமக் காடுகள் வளர்க்கப்படும்.

1978–79 ஆம் ஆண்டில் ரூ. 6.21 இலட்சம் செலவில் 560 ஹெக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டன. 1979–80-ம் ஆண்டில் ரூ. 4.67 இலட்சம் செலவில் இத்திட்டத்தினை மேலும் விரிவு படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 405 ஹெக்டேர் பரப்பில் தேக்கு மற்றும் கடின வகை மரத் தோப்புகள் வளர்க்கப்படும்.

**சந்தனத் தோட்டங்கள்.**

வனத்துறையின் வருவாயில் 40 சதவீதத்திற்கும் மேல் சந்தன மர விற்பனை மூலமே கிடைக்கிறது. சந்தன மர வளத்தை பெருக்கிட வாய்ப்பான இடங்களில், செயற்கை முறையில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது.

1978–79 ஆம் ஆண்டில் 10.32 இலட்சம் ரூபாய் செலவில் 169 ஹெக்டேர் பரப்பில் செயற்கை முறையில் சந்தன மரம்



வளர்ப்பும் மற்றும் இயற்கை சந்தனக் காடுகளில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1979–80 ஆம் ஆண்டில் 170 ஹெக்டேர் பரப்பில் சந்தன மரம் வளர்ப்பும் மற்றும் 665 ஹெக்டேரில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படுவதற்கு, ரூ. 19.03 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

1978–79 ஆம் ஆண்டில் 32.84 இலட்சம் ரூபாய் செலவில் 3,700 ஹெக்டேர் பரப்பில் மரம் வளர்க்கும் பணிகள் செய்யப்பட்டன. மேலும், சாலை ஓரங்களில் மரம் நடுதலும், பொது மக்களுக்குக் கிட்டும் வகையில் மரக்கன்றுகளை வளர்த்து வழங்குதலும் இத்திட்டத்தில் அடங்கும். 1979–80 ஆம் ஆண்டில் 365 கி.மீ. நீளத்திற்குச் சாலை ஓரங்களில் மரங்கள் வளர்க்கவும், 10 ஹெக்டேர் பரப்பில் சாலை ஓரங்களில் பூங்காக்கள் அமைக்கவும் பொது மக்களுக்கு விற்பனைக்காக 10 இலட்சம் செடிக் கன்றுகளை வளர்க்கவும், ரூ. 36.36 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

**வண்டலூரில் வன விலங்குப் பூங்கா அமைத்தல் :**

இந்திய இரயில்வேத் துறையின் வேண்டுகோளுக் கிணங்க சென்னை நகரிலுள்ள மத்திய இரயில் நிலையத்தை விரிவு படுத்துவதற்காகத் தற்போது மிருகக் காட்சி சாலை அமைத்துள்ள இடத்தை இரயில்வேத் துறைக்குக் கொடுத்திட இருப்பதால் சென்னையிலிருந்து 30 கி. மீ. தொலைவில் 350 ஏக்கர் நிலப் பரப்பில் வண்டலூரில் ஒரு வன விலங்குப் பூங்கா நிறுவவும், தற்போது மிருகக் காட்சி சாலையில் உள்ள மிருகங்களை வண்டலூருக்கு கொண்டு செல்லவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 300 இலட்சம் செலவுள்ள இத் திட்டத்தின்கீழ் திட்டத்தின் முதற் பகுதிப் பணிக்கு ரூ. 105 இலட்சம் அளிக்கப் பட்டுள்ளது. இந்தப் பூங்கா வனத்துறையின் நிர்வாகத்தில் இருக்கும்.

# தமிழிசை மரபு

'இசைப் பேரரசி'
சேலம் எஸ். ஜெயலட்சுமி



சங்க இலக்கியத்தில் இசையைப் பற்றியும் யாழ்க்கருவிகளைப் பற்றியும் இசைக் கலைஞர்களாகிய பாணர், பாடினி, விறலி ஆகியோரைப் பற்றியும் பல செய்திகள் உள்ளன. தமிழிலக்கியங்களில் சிறப்பாகக் கூறப்படுவன ஐவகை நிலங்கள், அவைகளின் இயற்கை, சூழ்நிலை, நிலங்களுக்குரிய தெய்வம், இசை, கூத்து, கருவிகள் ஆகியவை-மிகத் திறமையாக அவர்கள் வகுத்துக் கொடுத்த பிரிவுகள், அளித்த பெயர்கள் ஆகியவற்றை ஆராயுங்கால், அவை பல உண்மைகளை நமக்குப் புலப்படுத்துகின்றன.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களுக்குரிய சூழ்நிலை, பருவம், காலம், தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்றவாறு கருவிகளையும் பண்களாகிய இராகங்களையும் கூத்து வகைகளையும் வகுத்து வைத்துள்ளனர். பாடல்களும் இலக்கியங்களும் அவ்வாறே படைக்கப்பட்டன. சங்க இலக்கியத்தில் ஒவ்வொரு பாடலும் எந்த நிலத்திற்குரியது எனக் குறிக்கப்படும். இன்ன நிலத்திற்குரியது எனக் கேட்டதும் நம் மனக்கண் முன்னே அதற்குரிய சூழ்நிலைகளும், தோற்றங்களும், இயற்கை நலன்களும் தோன்றுவது எத்துணை வியப்பிற்குரியது!

குறிஞ்சி :

மலைகளும் மலை வளமும் கொண்ட இந் நிலத்திற்குரிய இசைக் கருவி குறிஞ்சியாழ்; தோற்கருவி—பறையெனப்படும். இதற்குரிய சிறப்பான பண் குறிஞ்சிப் பண். இந்நிலத்தின் தெய்வம் குறிஞ்சிக் கடவுள்-முருகன். இங்கு குறமகளிர் ஆடும் கூத்து குரவைக் கூத்து எனப்படும்.

பாலை :

இயற்கை வளங்கள் குன்றிய வனப்பிரதேசம் பாலை, இந்நிலத்திற்குரிய தெய்வம் கொற்றவை. இசைக் கருவி, பாலை யாழ் எனப்படும். பாலை நிலத்தின் சிறப்பான பண் பஞ்சுரம். தோற்கருவி துடியெனப்படும். வேடுவர்களும் மறவர்களுமாகிய இந் நில மக்கள் கொற்றவை தெய்வத்தை வழிபட்டுக் கூத்தியற்றினர்.

முல்லை :

காடும் காடு சார்ந்த பகுதிகளும், புல்வெளிகளும் இந் நிலத்திற்குரியவை. இங்கு காட்டாறுகள், நீர் ஊற்றுகள் இவற்றைக் கொண்டு மக்கள் வாழ்ந்தனர். இவர்கள் தொழில் ஆடு மாடு மேய்த்தல் ஆகும். யாதவ குலத்தினர். இவர்களுடைய கடவுள் திருமால். இந்நிலத்திற்குரிய இசைக்கருவி முல்லையாழ். பண் சாதாரி. தோற்கருவி ஏறுகோட்பறை; ஆயர் குலப் பெண்கள் ஆய்ச்சியர் குரவை என்னும் கூத்து ஆடினர். காற்று வாத்தியமாகிய புல்லாங்குழலும் சிறப்பாக இந்நிலத்திற்குரியதே.

மருதம் :

வற்றாத ஜீவ நதிகளின் கரைகளில் அமைந்த வயல்களும், வயல்கள் சூழ்ந்த கிராமங்களும் மருத நிலம் என அழைக்கப்பட்டன. இந்நிலத்தின் தெய்வம் இந்திரன். இசைக் கருவி மருதயாழ்; தாளக் கருவி முழவு. மருதப்பண் இந்நிலத்தின் சிறப்பான பண். பயிர்த் தொழில் செய்து வாழ்ந்த மக்கள் திருவிழாக்கள் கொண்டாடுவதிலும், புது நீராடுதலிலும் தனிச் சிறப்புப் பெற்று விளங்கினர்.

நெய்தல் :

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப் பெயர் பெற்றன. வருணன் இந்நிலத்தின் தெய்வம். பரதவர் குடியிருப்புகள் பாக்கம் என்றும், பட்டினம் என்றும் அழைக்கப்பட்டன. இந்நிலத்திற்குரிய இசைக் கருவிகள் நாவாய்ப் பம்பையும் விளரியாழுமாகும். செவ்வழிப்பண் இந்நிலத்திற்குரிய பண்ணா



கும். பரதவர் மீன் பிடிக்கும் தொழில் செய்வதும் கடலாடுவதுமாக வாழ்ந்தனர்.

ஐவகை நிலத்திற்குரிய பல பொருள்கள் குறிக்கப்பட்டிருப்பினும், இங்கு இசை மரபிற்கு எடுத்துக்காட்டான கருவி, பண், கூத்து வகைகளை மட்டும் குறிப்பிட்டுள்ளோம்.



**பாணர் வரன்முறை**

சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பரிபாடல் ஆகிய சங்க இலக்கிய நூல்கள் யாழ்க்கருவிகளைப் பற்றியும், யாழ் இசைத்த பாணர்களைப் பற்றியும் பல அரிய செய்திகளைப் பேசுகின்றன. இசைக்கலைஞர்கள் ஒரு வகுப்பினராகவே திகழ்ந்தனர். அவரவர் கையாண்ட கருவிகளுக்குத் தக்கவாறு பெயரிட்டு அழைக்கப்பட்டனர். ஆண் இசைக்கலை வல்லுநர்கள் 'பாணர்' என அழைக்கப்பட்டனர். பெண் இசைக் கலைஞர் 'பாடினி' என்றும் ஆடல் பாடல்களில் வல்ல இளமங்கை 'விறலி' எனவும் அழைக்கப்பட்டனர்.

'பாணன், பறையன், துடியன், கடம்பனென்றிந் நான்கல்லது குடியுமில்லை' என்று வரும் வரியில் கடம்பு, பாறை, துடி ஆகியவை இசைக்கருவிகளின் பெயர்கள். பறையினை முழக்குவோன் பறையன்; துடியினை முழக்குவோன் துடியன்; ''தோற்றந் துடியதனில்' என்றமையினால் நடராசப் பெருமானின் திருக்கரத்தில் இலங்குவதே துடியென்றாகிறது. கடம்பு என்ற வாத்தியத்தை இசைத்தவன் 'கடம்பன்' என அழைக்கப்பட்டான். கடம்பு என்ற கருவி இக்காலத்தும் நீலகிரி மலையின் சில பகுதிகளில் காணப்படுவதாகத் தெரிய வருகிறது. பண் இசைத்துப் பாடுவோர் பாணர் எனப் பெயர் பெற்றனர்.

யாழ்க்கருவி பலவகைப் பட்டதாக இருந்ததென்று தெரிய வருகிறது. மகரயாழ், செங்கோட்டுயாழ், சீறியாழ், பேரியாழ் என ஏழ் நரம்புகள், பதினான்கு நரம்புகள் இருபத்தியோரு நரம்புகள் இவ்விதம் பூட்டப்பெற்றுப் பலவகை யாழ்க்கருவிகளாக விளங்கின. பாணர்களுள் சிறு பாணர், பெரும்பாணர் என இரு வகைக் கலைஞர்கள் இருந்தார்களெனத் தெரிகிறது. சிறுபாணாற்றுப்படை சீறியாழைப் பற்றியும், பெரும்பாணாற்றுப்படை பேரியாழைப் பற்றியும் பேசுகின்றன.

''பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க''

**—34-37 சிறுபாணாற்றுப்படை**

'இனிய நாதத்தைக் கொண்ட பொன் போன்ற நரம்புகளை உடைய சீறியாழை இடப்புறம் தழுவி நைவளம் என்னும் பண்ணை வெளிப்படுத்தும் பாலையைத் திறம்பட இசைத்தான் கைதேர்ந்த யாழ்ப்பாணன்' என்று கூறுகிறது சிறுபாணாற்றுப்படை.

பெரும்பாணாற்றுப்படை பேரியாழைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

''.........நெடிதென
இடனுடைப் பேரியாழ் மிறையுளிக் கழிப்பி
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி...''

**—461-463 பெரும்பாணாற்றுப்படை**

'பெரிய யாழை இடப்புறம் வைத்துக் கொண்டு இசை மரபிற்கும் இலக்கணத்திற்கும் ஏற்றவாறு நரம்புகளை மீட்டி, சுருதி கூட்டி இசைத்தான் பாணன்' என்று கூறப்படுகிறது. இசைக்கலையை முறையாகப் பயின்றவர்களால் மட்டுமே யாழைக் கையாள முடியும் எனக் கூறப்படுகிறது.

பாணர், பாடினி, விறலியர் ஆகியோர் ஊர் ஊராகச் சென்று தம் கலைத்திறனை வெளிப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். பெண் கலைஞர்களும் பாணர்களும் இணையான தேர்ச்சி பெற்று நாடுதோறும் சென்று கலைகளைப் பரப்புவதில் ஈடுபட்டனர் என்று தெரிகிறது. பாண்குடியினர் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி அமைதியான வாழ்க்கை நடத்துவதைக் காட்டிலும் கலையை விரும்பி ஆதரித்துப் போற்றிய அரசவைகளையும் செல்வந்தர்களையும் நாடிச் சென்று அவர்களுடைய ரசனையையும் ஆதரவையும் பெறுவதிலேயே மட்டற்ற மகிழ்வடைந்தனர். கலைஞனுக்கு ரசிகர்களின் ரசனையைக் காட்டிலும் வேறு எது மகிழ்வூட்ட முடியும்? ஊர் ஊராகத் திரியும் நாடோடி வாழ்க்கையில்



பல இன்னல்களும் இடையூறுகளும் ஏற்பட்டாலும், பாணர்களும் புலவர்களும் கட்டுப்பாடின்றி, சுதந்தரமான வாழ்க்கை நடத்துவதையே விரும்பினர் எனத் தெரிகிறது. ஆகவேதான், ஆற்றுப்படை இலக்கியங்களிலே ஒரு புலவர் அல்லது கலைஞர் மற்றொருவருக்கு இன்ன இடத்திற்குப் போனால் கலைக்கு மரியாதையும், ரசனையும், பரிசுகளும் நிறையக் கிடைக்கும் என ஆற்றுப்படுத்தும் காட்சிகளை நாம் காண்கிறோம்.

பாணர் முதலியோர் வெறும் கலைஞர்களாக மட்டுமின்றி, அரசவைத் தூதுவர்களாகவும் பிரதிநிதிகளாகவும் கூடப் பங்கேற்றனர் என்று கூறலாம். புலவர், பாணர்-சில சமயம் இருதிறனும் ஒருங்கே அமைந்த கற்றோர்—பெருமக்கள் இக்காலத்துப் பத்திரிகை நிருபர்களைப்போலவும் பணியாற்றினர் என்று சொன்னால் மிகையாகாது. அவர்கள் போர்க்களத்தில் தோன்றினர், அரசவைகளுக்குப் போந்தனர். ஏன், எளிய மக்கள் இல்லங்களுக்கும்கூடச் சென்று அன்றாடச் செய்திகளையும் நடப்புகளையும் ஊருக்குள் பரவச் செய்தனர். போர்க் காலத்திலும் மற்ற நாட்களிலும் எக்காலத்தும் இவர்கள் பணி நடந்து கொண்டிருந்தது. தக்கோர் எவரும் ஓர் அரிய செயலைச் செய்தால் உடனே அவ்வரிய செயலைச் செந்தமிழ்ப் பாக்களாக இயற்றிச் சரித்திரமாக்கினர். ஊர்களிலும், மலைகளிலும், காடுகளிலும் திரிந்த இவர்களுக்கு இயற்கை, பூகோளம், சரித்திரம், வனவிலங்கியல், தாவர இயல் ஆகிய பல சாத்திரங்களைப் பற்றியும் நல்ல அறிவு இருந்தது. சங்க இலக்கியங்களில் காணப்படும் செய்திகள் பௌதிகம், மருத்துவம், வனவிலங்கியல் போன்ற பல தற்கால ஆய்வுகளுக்கு மிகவும் பயன்படும் என்று கூறினால் மிகையாகாது.



சங்க காலத்தில் பல பெண் புலவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது மிக்க வியப்பிற்குரியது. இவர்கள் பல்வேறு குலத்தொழில் உடையவர்களாகவும், சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் இருந்தவர்களாகவும் இருப்பது அதனினும் அதிசயத்திற்குரியது. அக்காலத்தில் தொழிலையொட்டியே சமுதாயம் வகுக்கப்பட்டிருந்தது என்றும், பிற்காலத்தில் சாதி வேறுபாடுகள் தோன்றின என்றும் தோன்றுகிறது. இயற்புலவர்கள், இசைக் கலைஞர்கள், நடனப் பெண்கள் ஆகியோர் அரச குடும்பத்திலும் இருந்தனர்— எளிய தொழிலாளிகளின் இல்லத்திலும் தோன்றினர். பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு என்ற சங்க காலப் பெண் புலவர் பாண்டியனின் அரசமாதேவி. ஆதிமந்தி என்பாள் சோழ மன்னனின் திருமகள். நடனத்தில் வல்லவளான அவள் தன்னை 'ஆடு களமகள்' எனத் தன் பாடலில் குறிப்பிடுகிறாள். பாரி மகளிர், பாரி என்ற சிற்றரசனின் செல்வ மக்கள் குறமகள் இளவெயினி, குறமகள் குறியெயினி என்னும் பெண் புலவர்கள் வேட்டுவ குலத்தில் தோன்றியவர்கள் . வெண்ணிக்குயத்தியார் என்பவர் குயவர் குலத்தில் பிறந்தவர். பிற்காலத்தில் இக் குலத்தைச் சேர்ந்தவர்கள் தாழ்ந்த குலத்தவர் என்று இந்து சமயம் இழிக்க நேர்ந்தது நம் நாடு செய்த தவக் குறைவேயாம். இக்காலத்தில் இந்நிலை மாறும் பொருட்டு அரசாங்கம் பெருமுயற்சி எடுத்து அக் குலத்தவர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் கொடுத்து ஊக்கி வருதல் பாராட்டுக்குரியதாகும். காக்கை பாடினியார், ஔவையார் ஆகியோர் இயற்றமிழில் மிக்க புகழ் வாய்ந்தவர்களாக இருந்தனர். இயலும் இசையும் ஒன்றோடொன்று இணைந்து விளங்கியதாகத் தெரிகிறது.

இசையைப் பற்றிய குறிப்புகள் இல்லாத சங்கப் பாடல்களைக் காண்பது அரிது. அஞ்சியத்தை மகள் நாகையார் என்ற பெண்புலவர் குறிஞ்சி நிலத்தில் இசை நயத்தோடு கூடிய காட்சி ஒன்றை எவ்வளவு அழகாகவும் நகைச் சுவையுடனும் வருணிக்கிறார் பாருங்கள்!

> ''முடவுமுதிர்பலவின்குடமருள்பெரும்பழம்
> பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
> பாடிமி ழருவிப் பாறை மருங்கின்
> ஆடுமயின் முன்ன தாகக் கோடியர்
> விழவுகொண் மூதூர் விறலி பின்றை
> முழவன் போல வகப்படத் தழீஇ..''

—அகநானூறு-பாடல் 352

மலை நாட்டில் பலாப்பழத்திற்குக் குறைவேது? பல்கிளைக்குத் தலைவனாகிய ஒரு பெரிய மந்திக் குரங்கு, ஒரு நீர்வீழ்ச்சியின் அருகே பெரியபாறையின் மீது அமர்ந்திருக்கிறதாம்! அக்குரங்கு ஒரு பெரிய பலாப்பழத்தைத் தன் முன் வைத்துக்கொண்டிருக்கிறதாம். ஓர் அழகிய மயில் தன் தோகையை விரித்து ஆடுகிறதாம். இதற்கு மலையருவியின் இனிய ஒலி பின்னணி கூட்டுகிறதாம். இக்காட்சியைக் கண்ணுற்ற கற்பனை மிகு புலவர் ஓர் அழகிய நாட்டிய நாடகத்தையே தன் கண்முன் காண்கிறார். அழகிய மயில் ஆடும் விறலியாக, பாடிமிழருவிப் பின்னணியாக, மந்திக்கடுவன் முழவன்போல், அதாவது மத்தளம் வாசிக்கும் வித்துவானைப் போல் அமர்ந்திருக்கிறதாம். என்ன அழகிய கற்பனை! குறிஞ்சி நிலத்தின் செல்வக் கொழிப்



பின் பெருமையை ஆசிரியர் என்ன திறமை யுடன் எடுத்தியம்புகிறார் என்று பாருங்கள்!

இப்பாடலின் பிற்பகுதி இசை நுணுக்கத்தின் ஒப்பற்ற தன்மையை உவமையாகக் கொண்டு மேலும் சுவையூட்டுகிறது.

''நல்லிசை நிறுத்த நயவரு பனுவற்
றொல்லிசை நிறீஇய வுரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினு மினியனா லெமக்கே''

தலைவி, தனக்கும் தலைவனுக்கும் இடையே உள்ள அன்பு எத்தகையது என்று உவமைகளுடன் கூறுகிறாள். நல்லிசைப் புலமை வாய்ந்த பாண்மகன் இசை மரபில் துறை போகியவன்; தக்க பண்ணிலே அமைத்துப்பாடவல்லவன்; நுட்பமான இசைநயத்தைக் கையாளும் போது ஏற்படும் இன்பத்தைக்காட்டிலும் அதிகமாகவும், மணம் முடிந்து தன் கணவனுடன் முதன்முதல் அனுபவித்த இன்பத்தைக் காட்டிலும் அதிகமாகவும், இன்று மேலும் புதியதான சுவையோடு தங்கள் அன்பு இருக்கிறது என்று நயம்படக் கூறுகிறாள்.

மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவர் இசைவாணர்களைப் பற்றிய அரிய காட்சி ஒன்றை நமக்கு முன் தோற்றுவிக்கிறார். சங்க காலத்தில் சிற்றரசர்கள் போன்றோர் தங்களுடைய மெய்க்காவல் படையினருடன் இசைவாணர்களையும் தங்கள் பரிவாரங்களில் ஒரு பகுதியாகப் பேணிப் பராமரித்து வந்தனர் என்று தெரிகிறது. ஒரு பெரும்போரில் வீரத்துடன் போரிட்டுப் புண்பட்டு விழுந்த ஒரு சிற்றரசனின் இல்லத்திற்கு நப்பசலையார் சென்றார். அவ்வீட்டின் தலைவி தன்னைச் சுற்றிலும் தீய சகுனங்கள் ஏற்படுவதைக் கண்டு மனம் கலங்கியவளாய்த் தன் தலைவனின் உடல் நிலையையும் கவனிக்கிறாள். அவள் தாங்கொணாத துயரத்துடன் பின் வரும் சொற்களைப் பேசுகிறாள்.

''என்னை மார்பிற் புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்
அஞ்சுவரு குராஅர் குரலுந் தூற்றும்
நெல் நீ ரெறிந்து விரிச்சி ஓர்க்குஞ்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா
துடிய பாண பாடுவல் விறலி
என்னா குவிர்கொல் அளியிர் நுமக்கும்
இவணுறை வாழ்க்கையோ அரிதே யானும்
மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாராத்
தொன்றுதாம் உடுத்த அம்பகைத் தெரியற்
சிறுவெள் ளாம்பல் அல்லி யுண்ணுங்
கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்தல் அதனினும் அரிதே

—புறநானூறு 280

தலைவியானவள் பாணன், துடியன், விறலி இவர்களை விளித்துக் கூறுகிறாள்: 'எம் தலைவனின் மார்பில் புண்கள் ஆழமாகவும் பெரியவையாகவும் இருக்கின்றன. இப்பகல் வேளையில் தும்பிகள் வந்து ரீங்காரமிடுகின்றன. எத்தனை முறை ஏற்றி வைத்தும் விளக்குகள் மீண்டும் மீண்டும் அணைந்து போகின்றன! என்னையறியாமல் துயில் என்னை ஆட்கொள்கிறது! கூரையில் ஆந்தை ஓலமிடுகிறது! முதுபெண்டிர் வாய்குழறிப் பேசுகின்றனர். இத்தனை துர்ச்சகுனங்களையும் காணும் போது நம் தலைவன் பிழைப்பது அரிது என்று தோன்றுகிறது. துடியா! பாணா! விறலீ! உங்கள் தலைவிதி என்னாகுமோ நான் அறியேன்! இத்தகைய சுகவாழ்வு இனி உங்களுக்கு நீடித்திருக்கும் என்று என்னால் நினைக்கமுடியவில்லை! யானும் வெள்ளாம்பல், அல்லிக் கிழங்குகளை உண்டு ஒரு விதவையின் கோலத்தில் அதிக நாள் வாழ்ந்திருப்பேன் என்று தோன்றவில்லை!' என்று கூறுகிறாள்.

அங்கு நிலைமையை நேரில் கண்டறிய வந்த புலவர் இந்த நெஞ்சுருக்கும் காட்சியையும் சொற்களையும் கேட்டு மனம் நெகிழ்ந்தவராய் உடனே அச்செய்திகளை அழியாப் பாக்களாகப் புனைந்து அக்காட்சியினை அமரத்துவம் பெற்றதாகச் செய்து விட்டார்.

சங்க இலக்கியத்தில் மற்றுமொரு அரிய காட்சி, போரில் புண் பட்டு வீழ்ந்த வீரனுக்குப் பெண்கள் பணிவிடை செய்யும் காட்சி—ஒரு வீரன் அரசனைக் காப்பாற்றும் பொருட்டு, தான் முன்வீழ்ந்து பகைவனின் தாக்குதலை ஏற்றுக் கொண்டான். நேரில் விவரங்களைக் கண்டறிய வந்த புலவர், வீரனின் மனைவி தன் பெண் ஏவலாளிடம் கூறிக்கொண்டிருக்கும் இவ்வார்த்தைகளைச் செவிமடுத்தார்.



''தீங்கனி யிரவமொடு வேம்புமனைச்செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்க
கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதறி யாம்ப லூதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே

—புறநானூறு 281

'வாராய் தோழி! இரவம், வேம்பு ஆகிய இலைக்கொத்துக்களை முன்வாசற்படியில் செருகி வைப்போம். யாழும் மற்ற கருவிகளும் மெல்ல இனிய இசையை இசைக்கட்டும். குழலும் இனிய மணி ஓசையும் பின்னணி கூட்ட நாம் காஞ்சிப் பண்ணைப் பாடுவோம். நறுமணம் பொருந்திய சந்தனம், அகில் இவைகளின் புகை, வீடு முழுவதும் பரவட்டும். காதலந்தோழி வாராய்! வேந்தனின் உயிரைப் போரில் காப்பாற்றிய தீரனை நமது பணிவிடைகளால் மீண்டும் உயிர்பிழைக்கச் செய்வோம்'' என்று கூறுகிறாள்.

இதன் மூலம், துன்புற்று வருந்திய நோயாளிகளை இசை மூலமாகக் குணப்படுத்தவும் உற்சாக மூட்டவும் முயன்றனர் என்று தெரிய வருகிறது. சங்க காலத்துப் பெண்டிர்கள் பல கலைகளிலும் வல்லவர்களாகவும் அறிவு மிக்கவர்களாகவும் இருந்தனர் என்று தெரிகிறது. அரிசிற்கிழார் என்னும் புலவர் மேற்கண்ட காட்சியைத் தேனினும் இனிய தமிழ்ச்சொற்களில் வடித்துள்ள விந்தையைக் கண்டோம்.

### காலத்திற்கும் பருவத்திற்கும் ஏற்ற பண்கள்

இசைத் துறையில் காலத்திற்கேற்ற பண்களைப் பாடும் வழக்கம் தமிழிசையில் முன்பு இருந்திருக்கிறது. தேவாரங்களின் பண்களில் பகற் பண், இராப்பண் எனக் குறிக்கப்பட்டிருக்கும். இன்றும் வடநாட்டு இசையில் இப் பழக்கம் இருந்து வருகிறது. இராகங்களில் வரும் சுரங்களுக்கேற்ற உணர்வுகளோடு அவற்றைப் பாடும் காலங்களும் பருவங்களும் அமைக்கப்பட்டன. பண்களின் மூலம் உணர்ச்சி பாவங்களை நன்கு வெளிப்படுத்தும் தன்மை வடநாட்டு இசையில் இன்றும் உள்ளது. இவ்வழக்குத் தமிழ்நாட்டில் கர்நாடக சங்கீதத்தில் அடியோடு வீழ்ந்துபோய் விட்டது.

மருதப்பண் என்ற இராகம் மருதயாழின் முதன்மையான இராகமாக் வாசிக்கப்பட்டது. இப் பண் காலைக்குரியது என்று கூறப்படுகிறது.

''சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ண.......
புலர்ந்துவிரி விடியல்..........

என்று மதுரைக் காஞ்சியில் சொல்லப்படுகிறது. புலர்ந்து விடியும் காலத்திற்கு ஏற்ற இப்பண் வேனிற்காலத்திற்குரியது என்று சிலப்பதிகாரம் வேனிற்காதையில் கூறப்படுகிறது.

கானற்கடல் விளையாட்டினுள் கோவலன் கோபித்துச் சென்றபின் தனியே தன் மாளிகை திரும்பிய மாதவி தனிமையால் வாடியவளாய்ப் பிறிதொரு நாள் காலை நேரத்தில் ''வானுற சிவந்த மேனிலை மருங்கின் வேனிற்பள்ளி ஏறி'' ''அதிரா மரபின் யாழ் கை வாங்கி......'' என்றும் பின்னர்,

''அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியல் மருதமும் பெருகியல் மருதமும்
நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி
மூவகை இயக்கமும் முறையுளிக் கழிப்பித்
திறந்துவழிப்படுஉந் தெள்ளிசைக் கரணத்து
புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கி''



எனவும் கூறப்படுகிறது. மருதப்பண்ணை பழம்பஞ்சுரம் எனும் சங்கராபரண இராகம் என்று ஆபிரஹாம் பண்டிதர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தேவாரப்பண்களில் பழம் பஞ்சுரம் பகற்பண்ணாகவே குறிப்பிடப்படுகிறது.

செவ்வழிப்பண் செவ்வழியாழில் இட்டு வாசிக்கப்பட்டது. இது மாலைக் காலத்திற் குரியதாகும்.

''திவவு மெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணி
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி யிரட்டப் பலவுட
னொண்சுடர் விளக்க முந்துற.....
..................................
முந்தை யாமஞ் சென்ற பின்றை''

—மதுரைக்காஞ்சி

என்றும்,

''அருளா யாதலோ கொடிதே யிருள்வரச்
சீறியாம் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக''

—புறநானூறு

என்றும் கூறப்பட்டது. செவ்வழிப் பண் மாலை நேரத்திற்கும், கார்காலத்திற்கும் முல்லை நிலத்திற்கும் உரியதாகும். ஆகவே செவ்வழி யாழ் முல்லை நிலத்திற்கும் உரியதாகும். ஆகவே செவ்வழி யாழ் முல்லை யாழ் என்றே அழைக்கப்பட்டது.

'யாம யாழ்ப்பெயர்க் குறிஞ்சி யாழும்
செவ்வழி யாழ்ப்பெயர் முல்லை யாழும்..''

—சேந்தன் திவாகரம்

எனவரும் நூற்பாவினால் அறிகிறோம்.

செவ்வழிப்பண் இரங்கற்பண்ணாகும். விளரிப் பண்ணும் இரங்கற்றன்மை உடைத்து என அறிகிறோம்.

# இளங்கவிஞன்



'**க**விஞர் பழநி பாரதி, வருங்காலத்தில் ஒரு மகாக்வியாக வருவான்' என்று சின்னஞ்சிறு வயதிலேயே, உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் அன்பான வாழ்த்துக்களைப் பெற்ற இளங்கவிஞன் பழநி பாரதி, கோடம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 10+2 வகுப்பில் முதலாண்டு பயிலும் மாணவன். இன்னும் 16 ஆண்டுகள் நிரம்பப் பெறாத அந்த மாணவன் எளிய இனிய தமிழில் கருத்தூட்டமிக்க பல கவிதைகளை ஆக்கித் தருகிறான். அனைத்துலக குழந்தைகள் ஆண்டினையொட்டி, அந்த இளங்கவிஞனின் பாடல் ஒன்றினை இங்கே மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்:



புத்தகங்கள் படிக்கலாம்
புதுமைகளை அறியலாம்
நித்தம்கற்ற வழியிலே
நின்றுவாழ்வில் உயரலாம் !

நல்லறிவை நமக்கெல்லாம்
நல்கிக்காக்கும் புத்தகம் !
தொல்லையின்றி நாளுமே
துணையாய் நிற்கும்புத்தகம் !

அரியஉண்மை பலவற்றை
அறியவைக்கும் புத்தகம் !
புரிந்திடாத விந்தையைப்
புரியவைக்கும் புத்தகம் !

நல்லநல்ல புத்தகம்
நாளும்தேர்ந்து படிப்பவர்
வெல்லற்கரிய மனிதராய்
மேதினியில் வாழலாம் !

''வளரத் தொடினும் வெளவுபு திரிந்து
விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சம்.....''

—புறநானூறு

விளரிப்பண் நெஞ்சை உருக்கும் வல்லமை யுடையது. நெய்தல் நிலத்திற்குரிய விளரி யாழ், திறனில் யாழ் எனக் கூறப்படுகிறது.

''திறனில் யாழே நெய்தல் யாழாகும்''.
திறனில்யாழ் விளரி நெய்தனிலஞ் சிவனும்

—சேந்தன் திவாகரம்

நெய்தற்குரிய சிறுபொழுது விளரிப்பண் பாடுவதற்குரிய காலமாகும். செவ்வழிக்கு உரிமை மாலைக்காலமாகும். விளரிப் பண்ணையுடைய நெய்தல் யாழ், திறனில் யாழா யிருந்தமையின் செவ்வழிப் பண்ணைக் கொண்ட செவ்வழி யாழை மாலைக்கு உரிய தாகவும் ஏற்பாட்டிற்குரியதாகவும் இசை வல்லோர் வகுத்தனர் என்று தெரிகிறது.

சிலப்பதிகாரத்தில் கானல்வரியில் செவ்வழிப் பாலை, விளரிப்பாலை என்ற இரங்கற் பண்கள் இரண்டையும் மாதவி யாழிலே இசைக்கும் நேரம் மாலைக் காலமாகவே இருக்கின்றது.

''இளையிருள் பரந்ததுவே எற்செய்வான்
மறைந்தனனே
வளைநெகிழ எரிசிந்தி வந்தவிம்
மருண்மாலை''
''கதிரவன் மறைந்தனனே காரிருள்
பரந்ததுவே
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தஇம்
மருள்மாலை''
''பறவைபாட் டடங்கினவேபகல் செய்வான்
மறைந்தனனே
மறவையாய் என்னுயிர்மேல் வந்தஇம்
மருள்மாலை''



என்று பரந்து வரும் இருளை நோக்கிப் பாடுகின்றாள் மாதவி. அவள் பாடிய பண்ணைச் சித்திரிக்கின்றார் இளங்கோ அடிகள்.

''ஆங்ஙனம் பாடிய ஆயிழை பின்னரும்
காந்தள் மெல்விரற் கைக்கிளை சேர்குரல்
தீந்தொடைச் செவ்வழிப் பாலை
இசைஎழீஇப்
பாங்கினிற் பாடியோர் பண்ணுப்
பெயர்த்தாள்''

குரல் குரலாக வரும் செம்பாலைப் பண்ணில் கைக்கிளையைக் குரலாகக் கொள்ள எழும் செவ்வழிப் பாலையை விரைந்து வரும் மாலை நேரத்தைக் கருதி மாதவி இசைக்கத் தொடங்கினள் போலும்! செம்பாலைப்பண் சங்கரா பரணம் என்று வைத்துக்கொண்டால் இதன் கைக்கிளை குரலாகும் போது செவ்வழிப்பண் தோடி இராகமாக ஆகிறது. ஏழ்பெரும் பாலையில் செம்பாலையென்றும், நாற்பெரும் பண்களில் மருதயாழ் மருதப் பண் என்றும் தேவாரப்பண்ணில் பழயபஞ்சுரம் என்றும் தற்காலத்து சங்கராபரண இராகம் குறிக்கப்படுகிறது. நான்கு குறைச்சுரங்கள் (Four Flats) உள்ள தோடி ராகத்தை இரங்கற்பண் என்றும் நெஞ்சை உருக்க வல்லது என்றும் சொல்வது பொருத்தமே. அடுத்து விளரிப்பண்ணைப் பற்றி வரும் செய்யுளும் இக்கூற்றையே மெய்ப்பிக்கின்றது.

''நுளையர் விளரி நொடிதருந் தீம்பாலை
இளிகிளையிற்கொள்ளஇறுத்தாயால்மாலை
இளிகிளையிற் கொள்ள இறுத்தாய்
மன்நீயேல்
கொலை வல்லாய்என் னாவிகொள்
வாழிமாலை''

(கானல்வரி-சிலப்பதிகாரம்)





## பட்டதாரிகளின் பணி!

ஏழை மக்களின் வாழ்வெனும் பாலைவனம் சோலைவனமாகிட வேண்டும்; வருங்காலச் சந்ததிகளாவது வளமெலாம் பெற்று வாழ்ந்திட வகை செய்திட வேண்டும். அதுதான் பட்டதாரிகளின் முதற்கடமையாகிறது!

## பாராட்டு

பாராட்டுதல் என்பது ஜனநாயகத்திலே சாதாரணம் தான். ஆனால், அது அளவிற்கு அதிகமாகப் போய்விட்டால் ஆபத்து!

## இசைத் தமிழே !

சேர நன்னாட்டின் மங்கையர் வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது, தமிழில்தான்! வெற்றிக்கொடி பறக்க, எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பைத் தமிழில்தான் பாடினார்கள்.

பாண்டியனின் குமாரிகளுக்கு பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுகள்தான்.

கதிரவன் காய்வதை அடக்கிக் கொண்டு, மேனி சிவந்து மறையும் நேரத்தில் கடலோரத்தில், பட்டுக் கூடாரத்தினுள்ளே, பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது தமிழில்தான்!

—பேரறிஞர் அண்ணா.

செம்பாலையின் விளரிசுரத்தைச் சட்ஜமாக வைத்துக் கைக்கிளை இளியாக மாறும். இளி கிளையிற் கொள்ள எனும் சொற்றொடர் இதை விளக்குகின்றது. நெய்தல் நிலத்து நுளையர் விரும்பும் இசை விளரிப்பண். இரங்கற்பண்ணாகிய விளரி மூன்று குறைச்சுரங்களை (Three Flats) உடையதாக இருக்கின்றது. விளரிப்பண் இக்காலத்து நடபைரவியாக ஆகிறது.



குறிஞ்சி யாழ் யாமத்திற்கு—இரவுநேரத்திற்கு உரியது என்று சொல்லப்படுகிறது.

''யாம யாழ்ப்பெயர் குறிஞ்சி யாழ்''

எனச் சேந்தன் திவாகரம் கூறும்

''.............கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையிலும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும்....''

—அகநானூறு 102


சங்க இலக்கியத்தில் வேடுவப் பெண் ஓங்கு தினைப் பெரும்புனத்து இரவில் காவல் செய்த பொழுது, குறிஞ்சிப்பண் பாடினமையும், பயிர்களைத் தின்னத் திருட்டுத்தனமாக வந்த களிறு குறிஞ்சிப் பண்ணைக் கேட்டு மெய்ம்மறந்து உறங்கினமையும் கூறக் காண்கிறோம்.

பாலையாழ் நண்பகலுக்கு உரியது எனக் கூறப்பட்டுள்ளது. பாலையாழும் பாலைப் பண்ணுமாகிய இது பிரிதல் என்னும்உணர்வை உரிப்பொருளாக உடையது.

'பாய்கலைப் பாவை பாடற்பாணி, ஆசான் திறனமைவரக்கேட்டு' எனப்புறஞ்சேரியிறுத்த காதையினுள்ளே நண்பகலும் வேனிற்பெரும் பொழுதும் கொற்றவையாகிய பாலைத் திணைத் தெய்வம் பாலைப் பெரும் பண்ணோடு சார்த்திக் கூறப்பட்டன.

''நாற்பெரும் பண்களும் நால்வகைச் சாதிகளும் இருபத்தியொரு திறங்களும்'' என்று நூற்று மூன்று பண்களைப் பற்றி இசைநூல்கள் பேசுகின்றன. தமிழிசையைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்குச் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், தேவாரம், திவ்வியப் பிரபந்தம் ஆகிய நூல்களிலும், ஏராளமான செய்திகளும் சான்றுகளும் காணக்கிடக்கின்றன. தக்க முறையில் இப்பணியை மேற்கொண்டால் தமிழர் பண்பாடுகலை வளர்ச்சி, இசை மரபு ஆகியவை பறறிய பல உண்மைகளை உலகிற்கு அறிவிக்கக்கூடும் என்பதில் யாதும் ஐயமில்லை.

# பளபளக்கும் கருங்கல் ஏற்றுமதி!




உலகத்துத் தொன்மையான நிலப்பரப்புகளில் தமிழகமும் ஒன்று. தமிழகத்தின் பல்வேறு காலங்களில் பல்வேறு கனிமங்களை உள்ளடக்கிய பாறைகள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றில் ஒன்று இரும்பு, மக்னீசியப் பொருட்களை உள்ளடக்கிய கருமையான ''டோலரைட்'' என்னும் பாறையாகும். இப்பாறைகள்தான் இன்று வணிகச் சிறப்புப் பெற்று கரும்பாறைகள் (Black Granites) என அழைக்கப்படுகின்றன.

இதுநாள்வரை இக்கரும்பாறைகளைத் தனிப்பட்ட வியாபாரிகளும் தனிநபர்களும் வெட்டியெடுத்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இலாபம் ஈட்டி வந்தார்கள். இன்றைய தமிழக அரசு இத்தொழிலை அரசுடைமையாக்கி அதன் விளைவாகக் கிடைக்கும் வருவாயை நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த டாமின் (Tamin) நிறுவனத்தை உருவாக்கியுள்ளது.

'டாமின்' நிறுவன கரும்பாறை ஏற்றுமதி துவக்க விழா **16-6-1979** அன்று சென்னைத் துறைமுகத்தில் நடைபெற்றது.

விழாவில் தொழில் வணிகத் துறை இயக்குநர் திரு சி. இராமச்சந்திரன் ஐ.ஏ.எஸ். அவர்கள் வரவேற்புரையாற்றினார். சென்னைத் துறைமுக வாரியத் தலைவர் திரு வி. செல்வராஜ், ஐ.ஏ.எஸ் அவர்கள் தலைமையுரை யாற்றினார்.

திரு எம். கல்யாணசுந்தரம் எம். பி. அவர்கள் சிறப்புரை யாற்றினார்.

'டாமின்' நிறுவனத்தைச் சார்ந்த தலைவர் டாக்டர் ச. சரவணன் அவர்கள், முதல் ஏற்றுமதிக்கான நினைவுப் பொருளை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கட்கு வழங்கி நிறுவனத்தைப் பற்றிய விவரங்களை எடுத்துரைத்தார்கள்.

முதல் கல்லை, கப்பலில் ஏற்றி வைத்துப் பேசுகையில் முதல்வர் குறிப்பிட்டதாவது:

'இந்த நிகழ்ச்சி தமிழகத்தில் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பாக நடந்திருக்க வேண்டும். தாமதமாக இப்போது நடைபெறுகிறது.

''கனிம வளங்கள் நாட்டுக்குச் சொந்தமாக இருக்க வேண்டிய நிலையை விட்டு, தனிப்பட்டவர்கள் சிலர் இதனைத் தங்களுக்கு என்று ஆக்கிக் கொண்டு, இதன் மூலம் கிடைக்கும் இலாபத்தால் தாங்கள் மேம்பாடு அடையவும், தாங்கள் மட்டும் பயன்பெறும் அளவிலும் ஆக்கி இருந்தார்கள்.

''நான் முதல்-அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, சிலர் என்னிடம் வந்து, ''கறுப்புக் கற்களை வெட்டியெடுக்கும் உரிமங்கள் சில நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இதே உரிமங்களை எங்களுக்கும் கொடுத்தால் நாங்கள் நல்ல முறையில் செயல்பட முடியும்'' என்று கேட்டனர்.

''இந்தக் கறுப்புக் கல்லால் என்ன இலாபம் வந்துவிடப் போகிறது என்று நான் அவர்களிடம் சாதாரணமாகக் கேட்டேன். அவர்கள் என்னிடம் ''நீங்கள் 2, 3 ஏக்கருக்கு எங்களுக்கு அனுமதி தந்தால் மாதம் ரூ. 3 இலட்சம், 4 இலட்சம் என்று வீட்டில் உட்கார்ந்து சம்பாதிப்போம்'' என்று கூறினர்.

''நான் உடனே அதிகாரிகளை அழைத்து ''எத்தனை ஏக்கர்கள் இவ்வாறு யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?'' என்று குறிப்புக் கொண்டு வாருங்கள் என்று கூறினேன்.

அந்தக் குறிப்புகளை ஆழ்ந்து பார்த்தபின், இத்தகைய உரிமங்களை என்ன காரணத்தைக் கொண்டும் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்றும் அரசே இந்தப் பணிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவு போட்டேன்.

''சிலர் உரிமை வாங்கிய நிலத்துக்கு மேலாக அதிக நிலத்தில் கற்களை வெட்டி எடுத்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது.

''ஒரு மனிதன், தான் வாழ்வதற்காக ஏதாவது ஒரு வகையில் தொழில் செய்வது அவனது உரிமை. அதைத் தடுக்க முடியாது. ஆனால் மற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டியதைத் தான் ஒருவனே எடுத்துக் கொள்வதை அனுமதிக்க முடியாது.

''நான் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த நேரம், இலண்டன் நகரில் கறுப்புக் கல்லால்

ஆன ஒரு கட்டடத்தைப் பார்த்தேன். விரும்பத்தகாத கோடுகளைக் கிழித்துப் பாழாக்க முடியாத கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன.

''இந்தக் கற்கள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன என்று கேட்ட போது, இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டன என்றார்கள். நான் மறுபடியும் ''இந்தியாவின் எந்தப் பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டன?' என்று கேட்டேன்.

''அவர்கள் என்னிடம் இந்தியாவில் பல பகுதிகளில் இருந்து வந்தாலும் தமிழ்நாட்டிலிருந்து தான் பெருமளவில் வருகிறது' என்றார்கள்.




''இதனால் அரசுக்குக் கிடைத்த பலன் என்ன என்று எண்ணிப் பார்க்கத் தோன்றியது.

''இந்த நிறுவனத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யும் பணிகளை இடைத்தரகர்கள் மூலமாகச் செய்ய வேண்டாம் என்று சொல்லி இருக்கிறேன். அதன் படி இன்று நேரடியாக ஒப்பந்தம் செய்து இருக்கிறார்கள்.

''வெளிநாடுகளில் இந்தக் கற்கள் குறித்து விளம்பரம் செய்ய வேண்டும் என்று சொன்னேன். அதன் படி விளம்பரம் செய்யப்பட்டது.

''இதன் மூலமாகப் பலர் இந்தக் கற்களைக் கேட்டு இருக்கிறார்கள் இதனால் எத்தனையோ கோடி டாலர் கிடைக்கவும், அதனால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவும் வழி இருக்கிறது.



''இந்த நிறுவனத்துக்காக ஓர் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க வேண்டும் என்று அண்ணன் கல்யாணசுந்தரம் கூறினார். அப்படிப்பட்ட நிறுவனத்தைத் தமிழக அரசு நிச்சயமாக அமைக்கும்.

''ஆக்கபூர்வமான யோசனைகளை அனுபவமிக்கவர்கள் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளத் தமிழக அரசு தயாராக இருக்கிறது.

''இதில் தவறு இருந்தால் அதற்கு யார் காரணமோ அவர்கள் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

''தமிழ்நாட்டில் உள்ள சிவப்பு மண்ணைத் தேடி வெளிநாட்டினர் பலர் வருகிறார்கள். இந்த மண்ணை வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஆனால் அவர்கள் வெறும் மண்ணுக்காக வரவில்லை என்றும், அந்த மண்ணில் இருந்து இரசாயனப் பொருள் எடுக்கலாம் என்றும் என்னிடம் சொல்லிய போது, அந்த மண்ணை யாருக்கும் கொடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டு இருக்கிறேன்.''


தமிழக முதல்வர் அவர்கள், இத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்குத் துணிகள் வழங்கினார்கள். சப்பான் நிறுவனங்களுக்கு உரிமைப் பத்திரங்களை முதல்வர் அவர்கள் வழங்கினார்கள். ''தமிழ்நாடு 'டாமின்' நிறுவனம் ஆயிரங்காலத்துப் பயிர் போல தழைத்தோங்கட்டும்'' என்று முதல்வர் வாழ்த்தினார்.

விழா இறுதியில் பொது மேலாளர் திரு ஆர். சீனுவாசன் நன்றி கூறினார். தேசியக் கீதம் இசைக்க, விழா இனிது முடிந்தது.

—மருதம்

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

■ **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**

இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.

■ **கிராம ஏற்புத் திட்டம்:**

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.

■ **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**

விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.

■ **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**

நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படு கின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111

# பட்டுப் புழு வளர்ப்போம்



—கே. நடராஜன்.
மாவட்ட ஆட்சித் தலைவரின்
தனி உதவியாளர்.
செய்தி-மக்கள் தொடர்பு
திருச்சி

**ப**ட்டுப் புழு வளர்ப்பு ஒரு சிறந்த குடிசைத் தொழில். வீட்டில் இருந்தபடியே ஆண்டுக்குச் சுமார் ரூபாய் 5,000 முதல் ரூபாய் 10,000 வரை இதன் மூலம் வருவாய் பெறமுடியும்!

''ரூபாய் பத்தாயிரம் மட்டும் அல்ல, பன்னிரண்டாயிரம்கூட வருவாய் பெற முடியும்'' என்று சவால் விடுகிறார் நங்கவரத்தைச் சேர்ந்த திரு கே. பிச்சு சுப்பிரமணியம்.

நங்கவரம், காவிரி ஆற்றின் படுகையிலுள்ள எழிலார்ந்த கிராமம். சுற்றிலும் நெல்வயல்களும், வாழைத் தோட்டங்களும் கரும்புக் கொல்லைகளும் சூழ்ந்த பசுமையான சிற்றூர். அங்குள்ள உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக வேலை பார்ப்பவர்தான் திரு பிச்சு சுப்பிரமணியம்.

வரலாற்று ஆசிரியரான இவருக்குப் பட்டுப் புழு வளர்ப்பில் ஆர்வம் ஏற்பட்டதே ஒரு கதை!

ஒரு நாள், தனது மாமா மகன் திருமணத்திற்காகத் தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டிக்குச் சென்றிருந்தார் பிச்சு சுப்பிரமணியம். அங்கே பட்டுப் புழுக் கூடு வாங்கும் நிலையத்தைப் பார்த்தார். மாணவர்களுக்கு அது குறித்து எடுத்துச் சொல்லலாமே என்ற ஆர்வம் அவருக்குப் பிறந்தது. எனவே பட்டு வளர்ப்புப் பற்றி விசாரித்தார். ஏன், நாமே வளர்த்தால் என்ன? என்ற ஆர்வமும் அவருக்கு ஏற்பட்டது. இன்று பட்டு வளர்ப்பில் முன்னணி விவசாயியாக மாறி, கருத்தரங்கங்களில் ஆணித்தரமாக, ஆதாரப்பூர்வமாக, அனுபவ வாயிலாகப் பட்டு வளர்ப்புப் பற்றிக் கூறக் கூடிய அளவில் அவர் வளர்ந்துள்ளார்.

திரு பிச்சு சுப்பிரமணியத்தைப் பேட்டி கண்டபோது பட்டுவளர்ப்பில் தனது வெற்றி குறித்துப் பெருமிதத்தோடு பேசினார். தன்னைப்போல் பிறரும் பட்டு வளர்ப்பில் ஈடுபட்டு, இந்தியத் துணைக்கண்டத்தில் பட்டுவளர்ப்பில் தமிழகம் முன் நிற்க வேண்டும் என மிகுந்த ஆசையுள்ளவராக அவர் காணப்பட்டார்.

*ஆசிரியரான தங்களுக்குப் பட்டுப் புழு வளர்ப்பில் ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?

Δஇந்த வினாவுக்கு அவரது பதில்:

நான் பாப்பாரப்பட்டியில் முசுக்கட்டை செடி வளர்ப்பைப் பார்த்தேன். ஒரு தடவை நட்ட செடியை 15 ஆண்டு பயன்படுத்தலாம் என்றார்கள். கரும்பு அல்லது வாழை பயிரிட்டால்கூட இரண்டுமுறை அதாவது சுமார் 2 ஆண்டுகளுக்குத்தான் வைத்திருக்க முடியும். 15 ஆண்டு என்றால் தொல்லை இல்லையே என்று ஓர் ஈடுபாடு ஏற்பட்டது. அத்துடன் நெல், வாழை, கரும்பு எந்தப் பயிரானாலும் ஆறு மாதம் அல்லது ஓராண்டிற்கு ஒரு மகசூல்தான் பெறமுடியும். இதில் மாதந்தோறும் வருமானம் கிடைக்க வழி இருக்கிறது என்று தெரிந்ததும் துணிந்து இறங்கினேன்.

*எப்போது துவங்கினீர்கள்? இப்போது அனுபவம் எப்படி?

Δநான் சென்ற ஆண்டிலேயே துவங்கி விட்டேன். ஆனால் சென்ற ஆண்டில் புயல் - மழை காரணமாக உடனடியாக நான் பலனடைய முடியவில்லை. முசுக்கட்டை செடி 3 மாதத்திற்கு மேல் தண்ணீரில் மூழ்கிக் கிடந்தது. நல்லவேளை பயிர் அழுகி விடவில்லை. எனவே, கடந்த மூன்று மாதமாகப் பட்டுப் புழு வளர்த்து மாதந்தோறும் வருவாய் பெறுகிறேன்.

*எவ்வளவு இடத்தில் முசுக்கட்டை பயிரிட்டிருக்கிறீர்கள்?

Δ1 ஏக்கர் 40 சென்ட் இடத்தில் பயிரிட்டிருக்கிறேன்.

*அதில் பிற பயிர்களிட்டால் என்ன வருமானம் கிடைக்கும்? பட்டு வளர்ப்பில் எவ்வளவு கிடைக்கிறது.?

Δநல்லகேள்வி! வாழை போட்டால் ஆண்டுக்கு ரூ. 3000 முதல் ரூ. 3500 வரை கிடைக்கும். புயலடித்தால் சொல்ல முடியாது. கரும்பு நட்டால் ஆண்டுக்கு ரூ. 2,500 வரை கிடைக்கலாம். அதில் ஆலையின் ஆணையை எதிர்நோக்கியிருக்க வேண்டும். நெல் பயிரிட்டால் ஆண்டுக்கு ரூ.2,000 அல்லது ரூ. 2500 கிடைக்கும். ஆனால் பட்டுப்புழு வளர்ப்பில் ஆண்டிற்கு ரூ.12000முதல்ரூபாய் 15000 வரை நிச்சயம் கிடைக்கும். என்னால் குறைந்தது மாதம் ரூ. 1,000 நிகர வருமானம் இதன் மூலம் பெற முடியும்.

*கடந்த மூன்று மாதத்தில் பட்டு வளர்ப்பில் உங்கள் வருவாய் எவ்வளவு?

Δகடந்த பிப்ரவரி மாதத்தில் ரூ. 1050 கிடைத்தது. மார்ச் மாதத்தில் ரூ. 1,300 கிடைத்தது. ஏப்ரல் மாதம் புழுவிற்கு ஒரு நோய் ஏற்பட்டது, அதன் காரணமாக ரூ. 500தான் கிடைத்தது. ஆனால் இப்போதுநோய்க்கு மருந்து தெரிந்து கொண்டேன். எனவே, சராசரி சுமார் 60கிலோ அளவில் பட்டுக் கூடு உற்பத்தி செய்வேன். ஒரு கிலோ சுமார்

ரூ. 20 முதல் ரூ. 30 வரை பெங்களூரில் விற்பனை ஆகிறது. எனவே, எல்லாச் செலவும்போக மாதம் நிச்சயம் ரூ. 1,000 வருவாய் கிடைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை.

*ஆரம்பச் செலவு எவ்வளவு ஆயிற்று?

Δநிலத்தை உழுது, கொத்தி, வயலைப் பக்குவப்படுத்த ரூபாய் 1,500 ஆயிற்று. பொருட்களுக்கு அதாவது புழு வளர்க்கும் தட்டுகள்-100, கூடு கட்டும் சந்திரிகை 50, இரும்பு ஸ்டாண்ட் - 2 ஆகியவற்றிற்கு ரூ. 2,500 ஆயிற்று. இனி அவ்வப்போது புது தட்டுகள் செய்வது, நிலத்துக்கு உரம் போடுவதுபோன்ற சாதாரண செலவுதான் ஆகும். வேலையாட்கள் கூலி எல்லாம் சேர்த்தால்கூட மாதம் ரூ. 200 முதல் ரூ. 250-க்குத் தாண்டாது. அதையெல்லாம் கழித்துத்தான் மாதம் ரூ. 1,000 என்றேன்.

*அப்படியிருக்க பட்டு வளர்ப்பில் ஏன் இன்னும் அதிகம் பேர் ஈடுபடவில்லை?

Δஉண்மைதான். இந்தியாவில் பட்டு வளர்ப்பில் தமிழ்நாடு 4-வது இடத்தில் உள்ளது. 1978-ஆம் ஆண்டுக் கணக்குப்படி இந்தியாவில் ஆண்டுக்கு மொத்தம் 2700 டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. அதில் 80 சதவீதம் கர்நாடக மாநிலத்திலிருந்து உற்பத்தியானது. அதாவது 2,240 டன். வங்காள மாநிலத்தில் சுமார் 300 டன் உற்பத்தி, ஜம்மு-காஷ்மீரில் 80 டன். அதற்கு அடுத்து தமிழ்நாட்டில்.

பொதுவாக,குளிர்ச்சியான பிரதேசத்தில்தான் பட்டுப்புழு வளர்க்க முடியும் என்ற தப்பான கருத்து இதுவரை இருந்து வந்தது. இப்போதுகூட பல விவசாயிகள் முசுக்கட்டைச் செடி நம்ம ஊரில் பயிராகாது. பட்டுப்புழு இந்த வெய்யிலைத் தாங்காது என்று நினைக்கிறார்கள். இது தவறு. பொதுவாக முசுக்கட்டை ஒரு தோட்டப் பயிர்தான். நஞ்சை தேவையில்லை. தண்ணீர் வசதியிருந்தால்போதும் நான்கூட நஞ்சையில் வடிகால் வசதி செய்தபின்தான் முசுக்கட்டை பயிரிட்டிருக்கிறேன்.

அதேபோல் புழுவையும் சாதாரண ஓலைக்கூரை வேய்ந்து தாழ்வாரத்தில் வளர்க்கலாம். வெய்யில் காலத்தில் ஈரச்சாக்கைக் கட்டித் தொங்கவிட்டால் வெய்யில் பாதிக்காது.

மற்றொரு முக்கியமான அம்சம். இது பலருக்கு வேலை வாய்ப்புத் தரக்கூடிய தொழில்.



## தமிழன் வாழ்வு

**தமிழன் வாழவேண்டிய நல்வாழ்வு தன்னை மட்டுமே வாழ்வித்துக்கொள்ளக்கூடியதல்ல; தமிழன் நல்வாழ்வு வாழவேண்டும் என்பது, மற்றவர்களை வாழவைக்க வேண்டும் என்பதுதான்!**

—பேரறிஞர் அண்ணா

எனது வீட்டில் புழு வளர்ச்சியின் 3-வது, 4-வது பருவத்தில் செடியில் இலை கிள்ளுவதற்காக நாள்தோறும் 10 பேருக்கு வேலையிருக்கும். அத்துடன் வீட்டிலுள்ளவர்கள் வீண் அரட்டையில் பொழுது போக்காமல், பட்டு வளர்ப்பு என்ற ஆக்கப் பணியில் ஈடுபட முடியும். வீட்டிலுள்ள அனைவருக்குமே இதில் வேலையிருக்கும். புழுவினை வளரும் பருவத்தில் நன்றாகக் கவனித்தால் நல்ல தரமான கூடு கிடைக்கும்.

*எல்லோரும் இதில் ஈடுபடலாம் என்று சொல்லுகிறீர்கள் இல்லையா?

Δஆமாம். நெல் விற்பனை தேக்கமடைந்துள்ள இந்நாளில் பணப்பயிர் பயிரிடுங்கள் என்று விவசாயிகளுக்கு அறிவுரை வழங்குகிறோம். இது பணப்பயிர்தான். பட்டு வளர்ப்பு ஒரு விவசாயம்; அத்துடன் ஒரு கைத்தொழிலுங்கூட, பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் இலாபகரமான தொழில். இதில் ஈடுபட்டால் விவசாயிகள் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றங்காண முடியும்.

இவ்வாறு திரு பிச்சு சுப்பிரமணியம் தனது பேட்டியில் தெரிவித்தார்.

முசுக்கட்டை (மல்பரிச்) செடி வளர்ப்பவர்களுக்கு அருகிலுள்ள அரசு பட்டு வளர்ப்பு வித்தகங்களிலிருந்து முட்டைகள் கிடைக்கும். அவற்றைக் கொண்டு வந்து வீட்டிலேயே பட்டுப் புழு வளர்ப்பைத் தொடங்கலாம். பத்துநாட்களில். முட்டையிலிருந்து புழுக்கள் வெளித்தோன்றும். பிறந்தவுடன் சிற்றெறும்பு அளவு இருக்கும். வயதிற்கேற்றபடி-அதாவது சிறு புழுவுக்குச் சிறு தளிரும் (சிறிது சிறிதாகக் கிள்ளிப் போட வேண்டும்) பெரிதாக, பெரிதாக அதற்கேற்ற இலையும் போட வேண்டும்.

பெரிதாகப் புழுக்கள் பருத்துக் கூடுகட்டும் நிலையை அடைய 21 நாட்களாகும். 24 மணி நேரத்தில் புழு கூடு கட்டிவிடும். கூடு கட்டிய 4 நாளில் கூடுகளை அறுவடை செய்யவேண்டும். அவ்வாறு அறுவடை செய்த கூடுகளைப் பக்கத்திலுள்ள பட்டுக் கூடு அங்காடிகளில் விற்பனை செய்யலாம்.

பொதுவாக ஒரு கிலோ கூடுகள் ரூ. 20 முதல் ரூ. 25 வரை விற்பனையாகும்.

நல்ல வருமானம் வருவதோடு, ஒரு ஏக்கரில் மல்பரி பயிரிடுவதன் மூலம் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பல பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இந்தியத் துணைக்கண்டத்தில் சுமார் 32 இலட்சம் பேருக்கு இத்தொழில் மூலம் வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது. கைத்தறிக்கு அடுத்து இதுவே மிகப் பெரிய தொழிலாகும்.

எனவே, திருச்சி மாவட்டத்தில் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. தற்போது 148 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 170 விவசாயிகள் இத்தொழிலை மேற்கொண்டுள்ளனர். உப்பிலியாபுரம், குளித்தலைப் பகுதிகளில் அவர்கள் உள்ளனர். இவர்களுக்கு உதவ, துறையூர் வட்டத்தைச் சேர்ந்த உப்பிலியாபுரத்தில் பட்டு வளர்ப்பு ஆய்வாளர் அலுவலகம் உள்ளது. அவரது மேற்பார்வையின் கீழ் ஒரு முன்னோடிப் பட்டுப்பண்ணையில் (2.50 ஏக்கர்) மல்பரிச் செடி பயிரிடப்பட்டு, பட்டுப் புழுக்கள் வளர்க்கப்படுகின்றன.

இவ்வாண்டில் (1979-80) திருச்சி மாவட்டத்தில் மேலும் சுமார் 400 ஏக்கர் நிலத்தில் மல்பரி பயிரிடப்படும். இதற்காக விவசாயிகளுக்கு மானியமாகவும் பயிற்சி உதவித் தொகையாகவும் ரூ. 2,70,000 (இரண்டு லட்சத்து எழுபதாயிரம் ரூபாய்)செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேறும்போது திருச்சி மாவட்டத்தில் மட்டும் 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பட்டு நூல் உற்பத்தியாகும்.

மேலும் பட்டுப்புழு வளர்ப்போருக்கு உதவுவதற்காக உப்பிலியாபுரம், குளித்தலை, கிருஷ்ணராயபுரம் ஆகிய பகுதிகளில் விற்பனை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகப்பணிகள்

உலகிலேயே நீலகிரி மாவட்டம் தான் மிகவும் அருமையான தேயிலைச் செடி வளரும் நில வளத்திற்குப் பெயர் பெற்றதாகும். இம்மாவட்டம் முழுவதிலும் நிலவும் தட்பவெப்ப நிலை, தேயிலை வளர்ப்புக்கு மிகவும் பொருத்தமானது. மலைப்பகுதியில் 762 மீட்டர் (2500 அடி) முதல் 1219 மீட்டர் (4000 அடி) வரையுள்ள உயரத்தில் அமைந்துள்ள நிலப்பகுதியான கூடலூர் வட்டம் ஆண்டின் இரு பருவ மழையால் 3250 மில்லி மீட்டர் (130 அங்குலம்) கன மழை பெறுகின்றது. 1219 மீட்டர் (4000 அடி) முதல் 2438 மீட்டர் (8000 அடி) வரை உயரமுள்ள பீட பூமியில் இருக்கும் குன்னூர், உதகை வட்டங்கள் ஆண்டில் வட கிழக்குப் பருவக் காற்று மூலம் சுமார் 2,000 மில்லி மீட்டர் மழையைப் பெறுகின்றது. இது உலகிலேயே உயர்ரகத் தேயிலை வளர்ப்புக்குப் பக்கபலமாக அமைந்துள்ளது.

**திட்டத்தின் நோக்கம் என்ன?**

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் ஏற்பட்ட சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தப்படி தாயகம் திரும்பும் 5.25,000 இலங்கை வாழ் இந்தியர்களை 15 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் குடியமர்த்த வேண்டியுள்ளது. இவ்வாறு குடியமர்த்த இருக்கும் இலங்கை வாழ் இந்தியர்களில் பெரும்பாலோர், தேயிலை மற்றும் இதர தோட்டங்களில் வேலை செய்பவர்களாக இருப்பதால், இங்கு அவர்களை அதைப் போன்ற வேலைக்கு அமர்த்துவது மிகப் பொருத்தமானது என்று மத்திய அரசு கருதியது. இதனைக் கருத்தில் கொண்டு நீலகிரி மாவட்டத்தில் தேயிலை வளர்ப்புப் பணியினை மேற்கொள்ள மத்திய அரசால் திட்டம் வகுக்கப்பட்டு முதன் முதலில் 1968-ஆம் ஆண்டு சோதனை முறையில் துவக்கப்பட்டது. இதன்படி 1969-ஆம் ஆண்டு ஓர் அடிப்படைத்திட்டம் (Master Plan) தேயிலை வளர்ப்புக்காகத் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 1500 எக்டர் நிலத்தில் தேயிலை பயிரிடவும், இதனால் 3750 தோட்டத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தவும் 5 கோட்டங்கள் (Divisions) ஆரம்பிக்கப்பட்டன.


முதன் முதலில் தேயிலை நாற்றுகள் உருவாக்க குன்னூர் கோத்தகிரி உயர் மலைப்பகுதிக்குக் கிரேக்மோர் 6017 என்ற வகை தேயிலை கழிகளும் இடை மலைப்பகுதியான சேரம்பாடி, சேரங்கோடு, நெல்லியாளம் ஆகிய இடங்களுக்கு அத்திகுன்னா (எ, டி. கே) என்னும் தாய்க்கழிகள் (Clones) பெருமளவு உபயோகப்படுத்தப்பட்டன. இதுவுமல்லாமல் கோத்தகிரி, குன்னூர் ஆகிய பிரிவுகளில் பெருமளவு, சுந்தரம் (பி 5/63) ஸ்பிரிங்பீல்டு (எஸ். பி. 4/5) ஆத்ரே (பி 6/61) பாண்டியன் (பி. 6/62) கோல்கொண்டா (பி.6 36) புரூக்லேண்ட்ஸ் (பி. 6/24) ஜெயராம் (பி. 4/142) முதலான தாய்கழிகள் (க்ளோன்ஸ்) உபயோகப்படுத்தப்பட்டன. ஆகவே இத்திட்டம் முழுமையாக நிறைவேறும்போது இந்தியாவிலேயே மிகப் பெரிய தனித் தாய்க்கழித் தோட்டமாக (Biggest Single Clonal Estate) விளங்கும்.

நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்று திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு முன்னர், இயங்கிக் கொண்டிருந்த அரசு தேயிலைத் தோட்டத் திட்டமானது ஓர் அரசு நிறுவனக் கழகமாக 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்திற்குட்பட்டு 22-8-1975-இல் இணைக்கப்பட்டது. 1-4-1976 முதல் இத்தேயிலைத் தோட்டக் கழகம் இயங்கி வருகிறது.

வேளாண்மை மறு நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தினர் யுனைடெட் கமர்ஷியல், கனரா வங்கி இந்தியன் வங்கி மூலமாக இத்திட்டத்திற்கு ரூ. 302 இலட்சத்து 79 ஆயிரம் நிதி உதவி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர்.

இக்கழகம், பயிர் செய்யப்பட்டதும், செய்யப்படாததுமான 1517 எக்டர் நிலப்பரப்பை, நீண்ட காலக் குத்தகையில் ஒரு எக்டருக்கு ரூ. 500 வீதம் குத்தகை வரி வழங்கி தமிழ்நாடு அரசு வனத்துறையிலிருந்து நிலத்தைப் பெற்று இயங்கி வருகிறது. இதுவரை 1462.05 எக்டர் நிலப்பரப்பில் தேயிலை பயிர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1979-ஆம் ஆண்டு இத்திட்டம் முழுமை பெற்று விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள காடுகள் பொது ஏலத்தில் விற்கப்பட்டு குத்தகைதாரர்கள் மூலமாகத் துப்புரவாக அகற்றப்பட்டு, பின்னர் பண்படுத்தப்பட்ட நிலத்தில் 15 முதல் 18 மாதம் வயதுள்ள தேயிலை நாற்றுகள் மொத்தமாக ஒரு எக்டருக்கு 11,000 நாற்றுகள் வீதம் நடப்படுகின்றன. விதைப்பதன் மூலம் அல்லாமல் தாய்க் கழியினால் உற்பத்தியாகும் நாற்றுகளே நடுவதற்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. செடி நட்ட



நான்கு ஆண்டுகளிலேயே முறையாக 10 நாட்களுக்கு ஒரு முறை தேயிலை கொழுந்து பறிக்கப்பட்டு வருகிறது. இந்த முதல் நான்கு ஆண்டுகளுக்கிடையே செடிகளுக்கு நிலத்திருத்தம்; களைபிடுங்குதல், பூச்சி மருந்து அடித்தல், தொற்று நோய்த்தடுப்பு, மருந்தடித்தல் போன்ற பண்ணை வளர்ப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உயர் மட்ட மலைப் பகுதியில் உள்ள செடிகளுக்கு நான்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் கீழ்ச்சம வெளி மலைப்பகுதியில் உள்ள செடிகளுக்கு 6 முதல் 7 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தழை வெட்டும் (Pruning) வேலை செய்யப்படுகிறது.

**இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோருக்கு**

இக்கழகத்தில் 1780 இலங்கை குடிபெயர்ந்தோர் குடும்பங்

களுக்கு (1469 + 311—ஜென்மம் பிரிவு) இதுவரை மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. அதுவுமல்லாமல் 24 இலங்கை குடிபெயர்ந்தோர் அல்லாதவர்கள், தற்காலிகமாகச் சேரம்பாடி கோட்டத்தில் ஆரம்பம் முதல் பணியாற்றிய குடும்பங்களையும் நிரந்தரப்பணியாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

இக் கழகத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 1905 தொழிலாளர்கள் குடியிருப்புகளில், இதுவரை 1379 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதம் உள்ள வீடுகளைக் கட்டி முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இக்கழகத்தில் நிர்வாக இயக்குநர் முதல், பலதரப்பட்ட ஊழியர்களுக்கும் இலவசக் குடியிருப்பு மனைகள் கட்டப்பட்டுள்ளன. அனைத்துப் பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் அளிப்பதற்கான திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்படும்.

ஒரு நாளுக்கு 8 மணி நேரம் வீதம் வாரத்தில் 6 நாட்கள் தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையே செய்து கொண்ட உடன்பாட்டின்படி அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் ஊதியத்துடன்



கூடிய ஒன்பது விடுமுறைநாட்கள் தவிர மற்ற எல்லா நாட்களிலும் அவர்கள் பணி புரிகின்றார்கள். இந்நிறுவனத்தில் உள்ள எல்லா வேலைகளும் நிரந்தரத் தொழிலாளர்களால் செய்யப்பட்டு வருகின்றன.

**தொழிலாளர்கள் அடையும் பயன்கள் :**

இத்தோட்டக் கழகத்தில் பணிபுரியும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவச வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. தவிரவும் இலவச மின்வசதி, தண்ணீர் வசதி, மருத்துவ வசதிகள் முதலியனவும் செய்து கொடுக்கப்படுகிறது. ஒரு குடும்பத்திலுள்ள இரண்டு நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. மற்றும் ஒவ்வொரு நிரந்தரத் தொழிலாளிக்கும் ஆண்டுக்கு ஒரு முறை மழைப் பாதுகாப்பு கம்பளியும் (Field Cumbly), இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வீட்டு உபயோகத்திற்கான கம்பளியும் (Rugs) இலவசமாக வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தோட்டத் தொழிலாளர்கள் விதிகளின்படி கிடைக்கும் விடுப்பு வசதிகளும் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பெண் தொழிலாளிக்கும் 12 வாரம் ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி, தரப்படுவதுடன் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளுக்கு தலா ரூ. 15 வீதமாகப் பயணப்படி அளிக்கப்படுகிறது. 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பராமரிப்பிற்கென குழந்தைக் காப்பகம் (Creche) அமைத்து நிரந்தரமாக ஒரு பெண் காப்பாளர் அமர்த்தப்பட்டு குழந்தைகள் பேணி காக்கப்பட்டு வருகின்றனர்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர் குடும்பம் பெரிய குடும்பமாகவுள்ளதுகுறைந்தது 6 நபர்களாவது ஒவ்வொரு குடும்பத்திலும் அடங்கியுள்ளனர். இவர்கள் குடும்ப நலத் திட்டங்களைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பதை ஊக்குவிப்பதற்காக, நிரந்தரப் பெண் தொழிலாளிகள் கருத்தடைக்கான அறுவைச் சிகிச்சை மேற்கொண்டால் பின் வரும் ஊக்கப் பணம் அளிக்கப்படுகிறது.


# தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்
# சென்னை-600 017.

| திட்டங்கள் | திட்டத்தின் மதிப்பீடு | திட்டத்தின் பரப்பளவு | திட்டம் முழுமையாக உருவாகிய பின்பு உப்பு உற்பத்தி | திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு |
|---|---|---|---|---|
| 1. மாரியூர் வாலிநோக்கம் உப்பு கூட்டுத் திட்டங்கள் வாலி நோக்கம் முதுகுளத்தூர் (வட்டம்) இராமநாதபுரம் (மாவட்டம்) | ரூ. 145 லட்சம் | 5566 ஏக்கர் | 2.4 லட்சம் டன் | 1500 நபர்கள் |
| 2. மரவக்காடு வடகாடு உப்புத் திட்டம் பட்டுக் கோட்டை (வட்டம்) தஞ்சாவூர் (மாவட்டம்) | ரூ. 2 கோடி (சுமார்) | 5400 ஏக்கர் | 1.5 லட்சம் டன் | 1000 நபர்கள் |

DIPR/29692/79-11/AAB

இரண்டு குழந்தைகள் உள்ள பெண்ணுக்கு—ரூபாய் 500.

மூன்று குழந்தைகள் உள்ள பெண்ணுக்கு ரூபாய் 350.

நான்கு அல்லது அதற்கு அதிகமான குழந்தைகள் உள்ள பெண்ணுக்கு, ரூபாய் 200.

அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் (Vasectomy) ஒவ்வொரு ஆண் தொழிலாளர்களுக்கும் ரூ. 100 வீதம் உதவிப்பணம் வழங்கப்படுகிறது.

**சேரங்கோடு தேயிலைத் தொழிற்சாலை :**

தயாரிக்கப்பட்ட பெரும் செயல் திட்டத்தில் (Master Plan) சேரம்பாடி, சேரங்கோடு, நெல்லியாளம் ஆகிய மூன்று கீழ் பிரதேசத்திலுள்ள கோட்டங்களிலிருந்து பறிக்கப்படும் தேயிலைக்கென ஒரு தொழிற்சாலையும், குன்னூர், கோத்தகிரி ஆகிய கோட்டங்களுக்கென ஒவ்வொரு தொழிற்சாலையும் கட்ட முன்மொழியப்பட்டுள்ளது. முதல் கட்டமாக கீழ்ப் பிரதேசத்திலுள்ள மூன்று கோட்டங்களில் கிடைக்கும் தேயிலைக் கொளுந்திலிருந்து ஆண்டொன்றுக்கு 1.5 மில்லியன் கிலோ (15 இலட்சம்) தேயிலை தயாரிக்கும் திறனற்ற சி. டி. சி. தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூ. 87 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. மிகப் பெரியதும் நவீன இயந்திரங்களைக் கொண்டதுமான இத்தொழிற்சாலைதான் தமிழ்நாடு அரசு நிறுவனத்தால் கட்டப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளில் மிகப் பெரிய ஒன்றாகும்.



**பங்காளிகள**

ஒரு தொழிற்சாலையில் வேலை செய்வோர் அதன் பங்காளிகளாக இருந்து செயல்பட வேண்டுமேயல்லாமல் கூலிக்காரர்களாக இருந்து குறைபட்டுக் கொண்டே இருக்கக்கூடாது!

—தந்தை பெரியார்

**குன்னூர் தொழிற்சாலை :**

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பி. ஓ. பி. தேயிலை விலையைக் கணக்கிட்டுப் பார்த்ததில் பல வகையான க்ளோனில் வரும் தேயிலையானது சாதாரணமான பி. ஓ. பி. தேயிலையைக் காட்டிலும் ஒரு ரூபாயாவது அதிகம் விலை நிச்சயமாகக் கிடைக்கும். க்ளோன் முறையில் உற்பத்தியாகும் தேயிலைச் செடியிலிருந்து கிடைக்கும் கொழுந்துகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் பொருட்டு குன்னூரில் ஆண்டு ஒன்றுக்கு 0.75 மில்லியன் கிலோ உற்பத்தித் திறனுள்ள (ஆர்தோடக்ஸ்) தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூபாய் 48 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது.

**மிளகு உற்பத்தி :**

இக்கழகத்தின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்தோடும், அந்நியச் செலாவணியை ஈட்டுவதையும் குறிக்கோளாகக் கொண்டு தேயிலைச் செடிகளின் இடையிடையே மிளகைப் பயிரிடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைத் தொடங்கும் பொருட்டு நெல்லியாளம் தேயிலை வளர்ப்புக் கோட்டத்தில் தேயிலைச் செடிகளின் இடையில் 60 மிளகு நாற்றுகளும், சேரங்கோடு 1971 தேயிலை வளர்ப்பு கோட்டத்தில் 90 மிளகு நாற்றுகளும், சேரம்பாடி தேயிலை வளர்ப்புக் கோட்டத்தில் 150 மிளகு நாற்றுகளும் பயிரிடப்பட்டுள்ளன.

**தேயிலை உற்பத்தியை அதிகரித்தல் :**

சமீப காலத்தில் இலங்கையில் நடைபெற்ற கலவரத்தின் காரணமாக அதிகமான இலங்கை வாழ் இந்தியர்கள், ஏற்கெனவே உள்ள மறுவாழ்வு வளர்ச்சித் திட்டங்களிலும், புதியதாகத் திட்டங்கள் எங்கெங்கு வகுக்க முடியுமோ அதற்கேற்ப வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பெருக்குவதெனத் தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்துள்ளது. அதன்படி இக்குறிக்கோளைக் கொண்டு கூடலூர் வட்டத்தில் 600 எக்டர் நிலப்பரப்பில் 2 புதுக் கோட்டங்கள் அமைத்து 389. 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேயிலை பயிரிடும் வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் ஏழு ஆண்டுக் காலத்தில் சுமார் 750 குடும்பங்களுக்கு அல்லது 1500 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வழங்க தன்னுடைய தீவிரப் பணியை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது.



**ஆர்ப்பாட்டக்காரர்கள்**

ஆர்ப்பரித்துக்கிடப்பவன் ஒரு நாள் அழுதுதான் தீர வேண்டும். மக்களைக் கசக்கிப் பிழிபவன் ஒருநாள் கண் கலங்கித்தான் நிற்க வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

1979-80, 1980-81 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 300 எக்டர் நிலப்பரப்பில் தேயிலை பயிர் செய்யத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2500 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடும் திட்டமும் தீட்டப்பட்டுள்ளது. இதன்படி மேலும் 1250 இலங்கை வாழ் இந்திய குடும்பங்களுக்கு வேலை வழங்க வாய்ப்பு ஏற்படும்.

**சிறு விவசாயிகளுக்கு நாற்றுகள் வழங்குதல் :**

சிறு விவசாயிகளுக்கு நாற்றுகள் வழங்கும் திட்டத்தை மேலும் அமல்படுத்தும் பொருட்டு நீலகிரி மாவட்டத்தில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை நாற்றங்கால் உருவாக்கி இதன் மூலமாக சிறு விவசாயிகளுக்கு ஒரு நாற்று 65 காசு வீதம் குறைந்த விலையில் நில வளர்ச்சி வங்கி மூலமாக வழங்கி சிறு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். 1975-76ல் உற்பத்தி செய்த 20 இலட்சம் செடியின் கழியினால் உற்பத்தியாகும். நாற்றுகளில் (V. P. Plants) 1976-77-ல் சுமார் 9.30 இலட்சம் நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 1978-ஆம் ஆண்டில் 9.35 இலட்சம் நாற்றுகள் சிறு விவசாயிகளுக்கும் 2.97 இலட்சம் நாற்றுகள் பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டன.

அதுவுமல்லாமல் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையில் அங்கம் வகிக்கும் சிறு விவசாயிகளுக்கும் ஊக்கமளிப்பதற்காகவும் இடையிடையே உள்ள காலி இடங்களைத் தப்பு நாற்றுகள் நட்டு நிரப்புவதற்காகவும் 2.10 இலட்சம் வி. பி. க்ளோன்ஸ் 1978-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.



கோ ஆப்டெக்ஸ்
பாலியஸ்டர், பட்டு ஆடைகள்
புத்துலகப் படைப்பு...!
புதுமைகளின் முன்னறிவிப்பு...!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGANT

# பல்கிப்பெருகும் பால் வளம்

மக்கள் நல்வாழ்வுக்கு வலிவூட்டும் வகையில் பால் வளம் பல்கிப்பெருக அரசு பல்வேறு முனைப்புத் திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. அப்பணிகள் பற்றிய விவரங்களில் சில :

தமிழ்நாடு பால்வள நிறுவனம், பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக, 1—5—1972ல் பதிவு செய்யப்பட்டு அதே ஆண்டின் ஜூலை முதல் நாளிலிருந்து பணி புரிந்து வருகிறது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் குறித்த விவரங்கள் வருமாறு:

பால்வளத்தையும், பால் உற்பத்தி நிறுவனங்களையும் மேம்படுத்துதல், அதற்குரிய தேவைகளுக்கு உதவுதல்.

பாலைச் சேகரிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் உரிய வழிமுறைகளை நிர்ணயிப்பது, உதவுவது.

கிராமப் புறங்களில் பால் பண்ணைகளின் உற்பத்தியை அதிகரித்தல், அதன் மூலம் நாளடைவில் பால் உற்பத்தியில் தன்னிறைவு காணுதல்.

நகர்ப்புற மக்களுக்கு நியாயமான விலையில் தரமான பால் கிடைக்கச் செய்தல்.


தமிழ்நாடு பால்வள நிறுவனம் துவங்கிய நாளிலிருந்து பல்வேறு துறைகளில் வளர்ச்சியும், சாதனைகளையும் பெற்றுள்ளது; இதன் வளர்ச்சியைக் கீழ்க்கண்ட அட்டவணைமூலம் அறியலாம்.


| | 1972-'73 | 1978-79 | சத விகித வளர்ச்சி |
|---|---|---|---|
| | (இலட்சம் லிட்டரில்) | | |
| பால் கொள்முதல் | 125.50 | 740.39 | 490 |
| பால் விற்பனை | 221.16 | 988.85 | 347 |
| விற்பனை (ரூ.இலட்சத்தில்) | 282.00 | 2606.00 | 824 |

**பால் கொள்முதல்-விற்பனை !**

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களாகிய கோயம்புத்தூர், சேலம், நீலகிரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, மதுரை, செங்கல்பட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பால், இருபது குளிர்பதன நிலையங்களில் குளிர வைக்கப்படுகிறது. பின்னர் இந்தப்பால், நிறுவனத்தின் பால் சேகரித்துச் செல்லும் வண்டிகள் மூலமும், ஒரு பகுதி ஈரோடிலிருந்து இரயிலோடு இணைத்த பாதுகாப்புத் தொட்டிகளின் மூலமும், அம்பத்தூர், மாதவரம் மற்றும் மதுரை பால் பண்ணைகளுக்குத் தருவிக்கப்படுகிறது. இவ்வாறு தருவிக்கப்பட்ட பால், ஆடை நீக்கிய பால் பொடி (Skim Milk Powder) மற்றும் வெண்ணெய்க் கொழுப்பு (Butter Oil) முதலியன சேர்த்துத் தரப்படுத்தப்பட்ட பாலாக (Standardised Milk) மாற்றப்படுகிறது.

இப்படித் தரப்படுத்தப்பட்ட பால், சென்னை மற்றும் மதுரை மாநகர்களில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் பால் மொத்த விற்பனை நிலையங்கள், பாலகங்கள் ஆகியன மூலமும் சென்னையில் மொத்த விற்பனை பிரிவுகள் மூலமும் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது.





பால் கொள்முதல் மற்றும் பால் விற்பனையில் தமிழ்நாடு பால்வள நிறுவனம் அடைந்துள்ள சாதனை விவரம் வருமாறு:

| ஆண்டு | பெறப்பட்ட பாலின் மொத்த அளவு | விநியோகிக்கப் பட்ட பாலின் மொத்த அளவு |
|---|---|---|
| | (இலட்சம் லிட்டரில்) | |
| 1976—77 | 610.38 | 849.86 |
| 1977—78 | 740.39 | 988.85 |
| 1978—79 (முன் மதிப்பீடு) | 760.00 | 1050.00 |
| 1979—80 (முன் மதிப்பீடு) | 825.00 | 1113.25 |

### தீவன உற்பத்தி ஆலை

மாதவரம் பால் பண்ணையில் மணிக்கு நான்கு முதல் ஐந்து டன் வரை உற்பத்தித் திறனுள்ள ஒரு கால் நடைத் தீவன உற்பத்தி ஆலை தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாலையின் உற்பத்தி சிறிது சிறிதாக அதிகப்படுத்தப் பட்டு தற்போது மாதமொன்றுக்குச் சராசரி 1200 டன் வீதம் தீவனம் உற்பத்தி செய்யப் படுகின்றது.

ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள, கால்நடை தீவன உற்பத்தி ஆலை, தீவன உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிப்பதற்காகக் குத்தகையில் எடுக்கப்பட்டுள்ளது. இந்த இரு ஆலைகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட கால்நடைத் தீவனம் விவசாயிகளுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையிலுள்ள கால்நடைப் பண்ணைகளுக்கும் விற்கப்படுகின்றது.

### வளர்ச்சிக்கழக நிதியுதவி

பால் பெருக்குத் திட்டம் ஒன்றின் கீழ் இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தால், இந்நிறுவனத்திற்கு நிதி உதவி செய்யப் பட்டு வருகிறது.

இவ்வாறு அளிக்கப்படும் நிதி உதவி ஜூன் 1980 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மலிவான விலையில் வழங்கப்படும் ஆடை நீக்கிய பால் பொடி (Skim Milk Powder) மற்றும் வெண்ணெய் கொழுப்பின் அளவு நவம்பர் 1977லிருந்து வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக அதிக விலையுள்ள வணிக ஆடை நீக்கிய பால் பொடி (Commercial Skim Milk Powder) வாங்கி தரப்படுத்தப்பட்ட பாலுக்காக உபயோகிக்க வேண்டியுள்ளது.

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் சில வளர்ச்சித் திட்டங்களுக்கென, பால் பெருக்குத் திட்டம் ஒன்றின் கீழ் 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் நிதி உதவி அளிக்கப்படுகின்றது. இந்த உதவி, முதலில் 887 இலட்சம் என ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்னர் 1082 லட்சம் எனவும், மாற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீண்டும் இதனை 1683 இலட்சம் என மாற்று ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந் நிதி உதவியின் மூலம் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறிப்பிடத் தக்கதாகும்.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படவிருக்கும் நிதி ஒதுக்கீடு | 1,683 |
| இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் இதுவரை (மார்ச் - 79) கொடுத்துள்ள நிதி | 852.83 |
| தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினால் உபயோகப்படுத்தப் பட்ட தொகை (பிப்ரவரி 79) | 803.21 |

இதுவரை வழங்கப்படாத தொகை மற்றும் உபயோகப்படுத்தப்படாத மீதித் தொகையான ரூபாய் 879.79 இலட்சத்தைப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் கைவசமுள்ளன.

இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் ரூபாய் 330 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தி ஒன்றியத்தின் மூலமாகப் பால் சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder Balancing dairy)யும், கால் நடைத் தீவன ஆலையும் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளது. அதற்கென ரூபாய் 201.76 இலட்சம் இதுவரை (மார்ச்-79) இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. இந்தத் தொகை ஈரோடு மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்குத் திட்ட 'வளர்ச்சிக்காக அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக்கழகம் ரூபாய் 136 இலட்சம் செலவில் குளிர் சாதன நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும், பால் சேகரித்துச் செல்லும் வண்டிகளை வாங்குவதற்கும் ஒப்புக்கொண்டுள்ளது.

மேலும் அது, மதுரை பால் பண்ணை மற்றும் பால் பொடி ஆலை அபிவிருத்தி செய்வதற்கும் நிதி உதவி அளிக்க ஒப்புதல் தந்துள்ளது. பால் பெருக்குத் திட்டம் ஒன்றின் கீழ் ரூபாய் 305 இலட்சத்தில் உற்பத்தி சமப்

படுத்தும் பால் பண்ணை ஒன்றினை சேலத்தில் துவக்க முடிவு செய்யப்பட்டு அதற்கென ரூபாய் ஐம்பது இலட்சம் இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இதற்காக இதுவரை (மார்ச்-79) ரூபாய் 51.10 இலட்சம் சேலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

**பால் பெருக்குத் திட்டம்**

முதலாவது பால் பெருக்குத் திட்டத்தின் தொடர்ச்சியாக இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதும் ஒரு இலட்சம் மக்கள் தொகையுள்ள எல்லா நகரங்களிலும் பால் விநியோகம் செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மூன்று அடுக்குகளாக அமைக்கப்பட்ட ஆரம்ப உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இத்திட்டத்தின் மூலம் கிராமங்களில் நிறுவப்படும். கிராம அளவில் ஆரம்பப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும் மற்றும் சங்கங்களின் கூட்டமைப்புகளும் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் நம் மாநிலத்திற்குத் தேவையான உரிய பங்கினைப் பெற தக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன், இத்திட்டத்தினைச் செயல்படுத்த அமைப்பு ரீதியாகச் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் குறித்தும் தமிழ்நாடு பால்வள நிறுவனம் ஆய்ந்து வருகின்றது. பால் பண்ணைத் துறையுடன் இணைந்து மேலே குறிப்பிட்ட முறையில் ''ஆனந்த்'' பாணியில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் ஆகிய அமைக்கும் பொறுப்பினையும் தமிழ் நாடு பால் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.


பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் திறமையுடன் செயல்படும் வரை தமிழ்நாட்டில் பால் விநியோகிக்கும் பொறுப்பினைத் தமிழ் நாடு பால்வள நிறுவனமே மேற்கொள்ளும். இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் தமிழ் நாட்டின் செயற்படுத்தப்பட வேண்டியதற்கான செலவு ரூபாய் நாற்பது கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக 1,698 பால் உற்பத்தியாளர் சங்கங்கள், தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் செங்கல்பட்டு, தென்ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, கோவை, மதுரை மற்றும் நீலகிரி ஆகிய எட்டு மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன.

இந்தச் சங்கங்களின் மூலம் 1,48,949 விவசாயிகள் பயன் பெறுகின்றனர். ஏழு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் சென்னை, செங்கல்பட்டு, ஈரோடு, கோவை, சேலம், தருமபுரி, நீலகிரி மற்றும் மதுரை மாநகர்களில் அமைக்கப்பட்டுள்ளன.

**சிறப்புத் திட்டங்கள் :**

மலைப் பகுதி மேம்பாட்டுத்திட்டம் ஐந்து ஆண்டுக் கால அளவில் நீலகிரி மாவட்டத்தில் ரூபாய் 84 இலட்சம் செல்வில் பத்தாயிரம் விவசாயிகள் பயன் பெறும் வகையில் பால் பண்ணை வளர்ச்சிக்கு வழி கோலுகிறது. இதன் மூலம் தற்போது நாளொன்றுக்குக் கிடைக்கும் 15 ஆயிரம் லிட்டர் பால் 40 ஆயிரம் லிட்டராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இத்திட்டத்தால் பயனடைவதற்காக நூறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதும், பால் குளிர்சாதன நிலையத்தை அதிகப்படுத்துவதும் கூட்டுறவுச் சங்கத்தாரின் கால்நடைகளைப் பராமரிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் கோத்தகிரியில் பால் குளிர் பதன நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மற்றொன்றைக் கூடலூரில் விரைவில் அமைக்க முடிவு செய்யப்பட்டு அதற்கான ஆயத்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 80 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவை மூலம், நாளொன்றுக்கு 27 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. பத்து நடமாடும் கால்நடை சிகிச்சை வண்டிகள் பத்தும் 25 கால்நடை மருத்துவப் பிரிவுகளும் தற்போது செயல் பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 109,77 இலட்சம் ரூபாய் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டு அதில் ரூபாய் 73.5 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

**கால்நடைக் காப்பு - கன்று வளர்ப்பு :**

25 ஆயிரம் உழவர்கள் அரசு மானியம் மற்றும் வங்கிக் கடன் மூலம், கலப்பினப் பசுக்கள் பெற்று, கன்றுகளைப் பராமரிக்க இத்திட்டம் வழிவகுக்கிறது.

சிறு உழவர்கள்-சொற்ப உழவர்கள் ஆகியோர்களுக்கு 50 சதவிகிதம் எனவும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு 66.2/3 சதவிகிதம் எனவும் அரசு மான்யம் வழங்கும். வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோவை மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் இச்சிறப்புத் திட்டத்தை ஐந்தாண்டுகளில் செயல்படுத்த, மத்திய அரசு ரூபாய்

237.97 இலட்சம் ஒதுக்கீடு செய்ய இணங்கியுள்ளது.

1977-78ல் 4312 கன்றுகளும், 1978-79ல் 5664 கன்றுகளும், இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, இதற்கென ரூபாய் 90.42 இலட்சம் மானியமாக இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

**பாதிக்கும் பகுதிக்கான திட்டம் :**

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பால் பண்ணையை ஏற்படுத்துவதற்காக வகுத்துள்ள இத்திட்டத்தில் தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் பயன் பெறும்.

பால் பண்ணை வளர்ச்சியில் தருமபுரி மாவட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது. இதற்கென இம் மாவட்டத்திற்கு, 1977-78ல் ரூபாய் 16.27 இலட்சமும், 1978-79ல் ரூபாய் 32.87 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருட்டிண கிரியில் பால்பொடி தயாரிக்கும் ஆலை ஒன்றினை ரூபாய் 175 இலட்சம் செலவில் அமைக்க இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் இத்திட்டம் 1976ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரமாவது:—

| 1976—77 | 1977—78 | 1978—79 |
|---|---|---|
| (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1.89 | 1.88 | 5.925 |

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்திற்கென தருமபுரி மாவட்டம் இந்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஐம்பது கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதும், குளிர்சாதன வசதிகள், உறைவிந்து தொழில் நுட்பக் கூட வசதிகள் அமைக்கவும், ரூபாய் 48.925 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 250 உறைவிந்து தொழில் நுட்பக் கூடங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டு அதில் 75 கூடங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

**செயல் திட்டங்கள் :**

பால் பெருக்குத்திட்டம் முதலாவதன் கீழ் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வந்த ஆடை நீக்கிய பால்பொடி மற்றும் வெண்ணெய்க் கொழுப்பின் அளவு, நவம்பர் 1977 லிருந்து வெகுவாகக் குறைக்கப்பட்டதன் விளைவாக, தமிழ்நாடு பால்வள நிறுவனம் மேற்கூறியவைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதனால் நிறுவனத்தின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப் பெற்று, பாலின் விற்பனை விலையை நிலை நிறுத்த இயலாததொரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

சென்னை நகரில் நாளொன்றுக்கு 2.5 இலட்சம் லிட்டர் பால் விற்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் விற்பனைக்கு இணையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பால் கொள்முதல் தன்னிறைவு காண 1979-80ம் ஆண்டு முடிவிற்குள் 1,700 ஆரம்ப கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


**சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்டம் :**


கோழி உற்பத்தி, கோழி இனவளர்ச்சித் திட்டம், 1976-77ல் செயல்படத் துவங்கியது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், நிலமற்ற விவசாயிகள், கோழிப் பண்ணை அமைத்துக் கணிசமான அளவில் வருமானத்தை அதிகப்படுத்தலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு அரசால், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், மதுரை ஆகிய நான்கு மாவட்டத்திற்கு 1,500 கோழிப் பண்ணைகள் வீதம், இந்திய அரசின் நிதி உதவியுடன் 6,000 குடும்பங்களுக்கு உதவ தீட்டப்பட்டதாகும் இத்திட்டம்.

ஒவ்வொரு கோழிப் பண்ணையும், நூறு கோழிகளைக் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு பண்ணைக்கும் ரூ. 5,330 முதலீடு செய்யப்படுகிறது. இதில் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியமாகவும், நடுத்தர விவசாயிகளுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும் அதாவது சிறு விவசாயிகளுக்கு ரூ. 1,330 மானியமாகவும், நடுத்தர மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு ரூ. 1,776 மானியமாகவும் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள முதலீட்டுப் பணம், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடனாகப்பெற ஏற்பாடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு, முதலாண்டு முடிவில், ஒவ்வொருவருக்கும், வங்கியில் பெற்ற கடனுக்குத் திருப்பித் தந்தது போக நிகர இலாபம் ஓராண்டிற்குச் சராசரி ரூ. 958/- கிடைக்கும்.

இத்திட்டம் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் கடனுதவியுடனும், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் கூட்டு முயற்சி மூலமும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை விரைவாகச் செயலாக்கி, முழுப் பயனைப் பெற, விவசாயப் பொருளுதவிக் கழகத்தின் வங்கிகளின் திட்டம் உதவுகிறது.





மேலும், முதலீடு செய்யும், வங்கிகளில் சில, விவசாய மறுநிதி அபிவிருத்திக் கழகத்தி லிருந்து மறுநிதிக் கடன் பெற்று குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்குகிறது.

இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், பின்வரும் உதவிகளை அளிக்கிறது—

அங்கீகரிக்கப்பட்ட கோழிப் பண்ணைக ளுக்குத் தரமான கோழிகள் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தாரால் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும் கோழிகளுக்குத் தேவையான தீவனம், தமிழ் நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தாரால் வழங் கப்படுகிறது. கோழிகளின் நலத்திற்குக்கோழி வளர்ப்பு நிறுவனம் பொறுப்பேற்றுப் பாது காக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்டு, பண்ணைகளில் கழிக்கப்பட்ட கோழிகளைப் பெறுதலும் மற்றும், புதிய கோழிக் குஞ்சுகள் விநியோகம் செய்தல் முதலிய பணிகளைத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் மேற் கொள்கிறது.

இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும், கோழிகளின் மூலமாகக் கிடைக்கும் முட்டை களைச் சேகரிப்பதும், அவற்றை நியாயமான முறையில் விற்பனை செய்வதும் இந்நிறுவனம் மேற்கொள்கிறது.

மேலும், கோழி வீடுகள் கட்டுதல், உப கரணங்கள் வாங்குதல், முதலிய பணிகள் செவ்வனே செய்ய இந்நிறுவனம் உதவுகிறது.

கோழிகளின் நோய், இறப்பு, மற்றும் இழப்பு முதலியவற்றைக் கருத்திற் கொண்டு இத்திட்டத்திற்குப் பெரும்பாலான வங்கிகள் கடன் அளிக்க முன் வராமல் இருந்தன. ஆகவே, இத்திட்டம், சிறப்பாகச் செயல்பட விரும்பி, நாட்டிலேயே முதன் முதலாகக் கோழி பாதுகாப்புத் திட்டம், தமிழ்நாட்டின் கோழிப் பண்ணைகளுக்குக் கொண்டு வரப் பட்டுச் செயலாக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் செங்கற்பட்டு, வடார்க்காடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அகில இந்திய நெருப்பு மற்றும் பொதுப் பாது காப்பு நிறுவனம் கோழிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கத் திட்டம் கொண்டு வந்து செயலிலும் இறங்கியுள்ளது.

கோழிகளுக்கு அதன் வயதுக்கேற்றபடி, மதிப்பீடு செய்யப்பட்டு நோய்களின் மூலமாக இறத்தல். எதிர்பாராத விபத்து ஏற்படுதல், வேலை நிறுத்தம், இயற்கை விபத்துகள் ஆகிய காரணங்களுக்காக, தகுந்த பாது காப்பு நிதி வழங்கப்படுகிறது.

கோழி பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் முதல், 72 வாரக் குஞ்சுகள் வரையிலும், எட்டு வாரக் குஞ்சுகள் முதல் 72 வாரக் குஞ்சுகள் வரையி லும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. பாது காப்புத் திட்டம் அமலாக்கப்பட்டதன் மூல மாக வங்கிகளும், விவசாயிகளும் திருப்தி அடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் வரும், விவசாயி களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர் களுக்குப் பொருளாதார இழப்பு ஏற்படாம லிருக்கும் பொருட்டு, உயர்சாதிக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. மேலும், கோழித் தீவனம் மலிவு விலையில் வழங்கப் படுகிறது. மேலும், கோழிப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் கோழிக் குஞ்சுகளை வளர்க்க உண்டாகும் மின்சாரச் செலவும் ஐம்பது சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.




இத்திட்டத்தின் சிறப்பான பயனை யாவரும் எய்த, இந்நிறுவனம் விவசாயிக ளுக்குக் கோழிக் குஞ்சுகள் வளர்த்தல், பரா மரித்தல், தீவனமிடல், நோய்களிடமிருந்து பாதுகாத்தல் ஆகிய பணிகளைச் செய்ய பயிற்சி அளிக்கிறது. அவ்வப்பொழுது ஏற் படும் குறைகளையும் நிவர்த்தி செய்து நோய்ப்பாதுகாப்பு முறையும், செயல்படுத் தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலமாக 327 சிறு விவசாயிகளும், 955 நடுத்தர விவுசாயி களும், 288 நிலமற்ற விவசாயிகளும் இது வரை கோழிப் பண்ணை அமைக்கக் கடன் பெற்றுள்ளனர். இதுவரை பத்து அரசுடை மையாக்கப்பட்ட வங்கிகளும், இரண்டு கூட் டுறவு வங்கிகளும், கடனுதவி வழங்கியுள்ளது.


விவசாயிகளுக்கு இத்திட்டம் செயல் படுத்தப்பட்ட பின் இதுவரை 22.98 இலட்சம் மானியமாக மத்திய அரசு வழங்கியுள்ளது.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்:**

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட் டம் எல்லா மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அமல்படுத்தப்படு கிறது. இருப்பினும், கோழிக் குஞ்சுகள் விநி யோகித்தல், தீவனம் விநியோகித்தல், கோழி முட்டைகள் சேகரித்தல், முட்டை விற்பனை ஆகிய பணிகளை 'டாப்கோ' நிறுவனம் மேற் கொண்டு எல்லா உதவிகளையும் அளித்து வருகிறது. •

குடிசைகள் கோபுரங்களாக உயர்ந்திட அரசு நடவடிக்கை எடுத்தது. — இன்று குடிசைப்பகுதிகளெல்லாம் அழகிய அடுக்கு மாடி வீடுகளாய்க் காட்சியளிக்கின்றன.

# குடிசை மாற்று வாரியம் குவிக்கும் புகழ்!



தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம் 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அமைக்கப்பட்டது. அதனிடம் சென்னை நகரில் உள்ள குடிசைப் பகுதிகளை அகற்றும் அல்லது மாற்றி அமைக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது.

**சமூகப் பொருளாதார ஆய்வு :**

வாரியம் அமைக்கப்பட்ட உடனே குடிசை வாழ் மக்களின் பிரச்சினைகளின் அளவை மதிப்பிடும் பொருட்டு ஒரு சமூகப் பொருளாதார ஆய்வு நடத்தப்பட்டது.

சென்னை நகரில் 1,202 குடிசைப் பகுதிகள் இருப்பதும், அவைகளில் மொத்தம் 7,37,531 மக்கள் கொண்ட 1,63,804 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றவென்றும் இவ்வாய்வுக் கணக்கெடுத்ததில் தெரியவந்தது.

குடிசை மாற்று வாரியம் அமைக்கும் முன்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 7384 குடியிருப்புக்களைக் கட்டி முடித்திருந்தது. 1970 முதல் 1977 வரை அடங்கியுள்ள காலத்தில் குடிசை மாற்று வாரியம் சுமார் 20,939 வீடுகள் கட்டி, 68 குடிசைப் பகுதிகளிலுள்ள மக்களைப் புதுக் குடியிருப்புகளில் அமர்த்தியது.

**விரைவான நடவடிக்கை:**

1977-78, 78-79 ஆண்டுகளில் ரூ. 1,013 இலட்சம் செலவில் 11,996 வீடுகள் கட்டிட திட்டம் தீட்டப்பட்டு, ரூ. 340 இலட்சம் மதிப்பில் 4,416 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. மீதியுள்ள வீடுகள் இவ்வாண்டு முடிவடையும். மேலும் 21 குடிசைப்பகுதிகளில் ரூ. 555.83 இலட்சம் செலவில் 6,320 குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டங்களும் உருவாகியுள்ளன.

வீடுகட்டும் திட்டங்களன்றி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், உலக வங்கியின் நிதி உதவியுடன் குடிசைப் பகுதி ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தினையும் இரண்டு ஆண்டுகளாக மேற்கொண்டு உள்ளது. சுமார் 6.06 கோடி செலவில் 23,000 குடும்பங்களுக்கு அவர்கள் தற்போது வசிக்கும் இடத்திலேயே சுற்றுப்புற மேம்பாடு செய்து தருவதும், சாலைகள், குளியல் அறைகள், குடி தண்ணீர் வழங்குதல், தெரு விளக்குகள், கழிவு நீர்க் கால்வாய்கள் அமைத்தல், பாலர் பள்ளிகள், குடிசைத் தொழில் பயிற்சி நிலையம் கட்டுதல், குடிசைப்பகுதிகளில் நெருக்கடி காரணமாக மாற்றப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 7,500 வீட்டு மனைகள் தயார் செய்வது-இவைகளெல்லாம் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டப் பகுதிகளிலுள்ள குடிசைகளில் தற்போது வசிப்பவர்களுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களைப் பட்டா செய்து கொடுப்பது இத்திட்டத்தின் சிறப்பான அம்சமாகும்.

**சுழல் நிதி :**

1977-78-ஆம் ஆண்டில் 4137 குடும்பங்கள் பயன் அடையும் வண்ணம் 20 குடிசைப்பகுதிகள் மேம்படுத்தப்பட்டன. 1978-1979 ஆம் ஆண்டு 8 குடிசைப் பகுதிகளில் 15,349 குடும்பங்கள் பயன் அடையும் வகையில் வேலை தொடங்கப்பட்டுள்ளது.

1979-1980ஆம் ஆண்டில் மேலும் 8 குடிசைப் பகுதிகளில் 2,320 குடும்பங்கள் பயன்பெறுமாறு வேலை எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. இத்திட்டத்திற்காக 1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய ரூ. 130 இலட்சம் செலவிடப்பட்டது. இந்த ஆண்டில் ரூ. 150 இலட்சம் செலவிடப்படும்.

**சமுதாய வளர்ச்சிக் குழு:**

அனுபவமிக்க சமூக நல்பணியாளர்களைக் கொண்ட ஒரு சமு



# தேசிய சேமிப்பில் தமிழ்நாடு சாதனை!

1978-79-ஆம் ஆண்டில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி அடங்கிய தமிழ்நாடு வட்டாரம் தேசிய சேமிப்பு வசூலில் முன் எப்போதும் **கண்டிராத அளவில் சாதனை நிகழ்த்தியுள்ளது.**

இந்த ஆண்டில் மொத்தச் சேமிப்பு வசூல் 144.6 கோடி ரூபாயாகவும், நிகர வசூல் 50.19 கோடி ரூபாயாகவும், இருந்தது. 1977–78-ஆம் ஆண்டில் மொத்த வசூல் 129.5 கோடி ரூபாயாகவும், நிகர வசூல் 37.2 கோடி ரூபாயாகவும் இருந்தது.

தமிழ்நாடு வட்டாரம் தன் வளர்ச்சி இலக்கைப் பல மடங்குகள் விஞ்சியுள்ளது. ஏஜென்சிகள் மூலமாக வசூல், நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1.1 கோடி ரூபாய்க்கு எதிராக 4.49 கோடி ரூபாயாக உயர்ந்தது. சம்பளப் பட்டியல் சேமிப்பு, நிர்ணயிக்கப்பட்ட 9.50 கோடி ரூபாய்க்கு எதிராக 10.05 கோடி ரூபாயாக உயர்ந்தது.

மாவட்டங்களுக்குள், சென்னை நகரம் 30 கோடி ரூபாய், கோயம்புத்தூர் 4 கோடி ரூபாய், சேலம் 2.86 கோடி ரூபாய், திருநெல்வேலி 2.53 கோடி ரூபாய் சேமிப்புக்காக வழங்கியுள்ளன.

---

தாய வளர்ச்சிக்குழு அமைக்க குடிசை மாற்று வாரியம் தீர்மானித்துள்ளது. விரைவிலே இக்குழு செயல்படும். இச்சமூக நலப் பணியில் சென்னை மாநகராட்சி, மின்சார வாரியம், சென்னை நகர்ப்புறக் குடி நீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை (பாசனம்) சமூகநலத் துறை மற்றும் சமூக நல நிறுவனங்கள் ஒத்துழைப்புக் கோரப்படும்.

மேலே குறிப்பிட்ட திட்டங்களில் அடங்காத குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்குதல், குளியல் அறை, கழிவறைகள் கட்டுதல், தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற வசதிகள் விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செய்து தரப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 72.43 இலட்சம் செலவில் 125 குடிசைப்பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்கள் பயன் அடைந்துள்ளனர். 1979-80ஆம் ஆண்டு மேலும் ரூ. 100 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வாழ்க்கைத்தரம் உயர....**

'மக்கள் நல்வாழ்வுப் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கி ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிகளிலும் முதியோர் கல்வி, குழந்தைகள் காப்பகம், சத்துஉணவுத் திட்டம், சேமிப்புத் திட்டம், மருத்துவ வசதி முதலியவற்றை அதன் சமூக நல உதவியாளர்களைக் கொண்டு செயல்படுத்தி வருகின்றது. அதற்காகக் குடிசை மாற்று வாரிய நிதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்ச ரூபாய் இப்பேரவைக்கு மானியம் வழங்கப்படுகிறது. செய்தித் துறை மூலம் படக்காட்சிகள் குடிசை வாழ் மக்களுக்குக் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**காவலர் பிரிவுகள்**


சென்னையில், அரசு மற்றும் மாநகராட்சிக்குச் சொந்தமான காலியாக உள்ள இடத்தில் புதிதாக அனுமதியின்றிப் போடப்படும்திடீர்க் குடிசைப் பகுதிகளை அப்புறப்படுத்த, இரண்டு காவலர் பிரிவுகள் வட சென்னைக்கு ஒன்றும், தென் சென்னைக்கு ஒன்றுமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வாடகை வசூலில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பான மேம்பாடு உண்டாகியுள்ளது. ஆண்டிற்கு ரூ. 31 இலட்சத்திலிருந்த வருவாய் தற்போது 44.43 இலட்சமாக அதிகரித்துள்ளது.

இதே வேகத்தோடு வாரியப் பணிகள் தொடர்ந்து நடைபெறின், சென்னை நகரில் உள்ள அனைத்துக் குடிசைப் பகுதிகளும் மேம்பாடு அடையப் பெற்றுக் குடிசைப் பகுதி மக்கள் மனநிறைவுடனும் சிறந்த சுகாதார வசதிகளுடனும் வாழ ஏதுவாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி


மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*


## டான்சி

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

திருச்சி

(அலங்கார வண்டிகள் அணிவகுப்பு)


26, 27-5-1979





ஒரு பொதுக் கூட்டத்தில் பார்வையாளராக.....






"வணக்கம்"

காமராஜர் கைப்பட எழுதிய சாத்தூர் தாலுகா தேசிய மாநாடு வரவு செலவு கணக்கு விவரம்

-1923



# தமிழக முன்னேற்றத்திற்கு தொண்டு செய்த தமிழர்!



**ஆர். துரைராஜ்,**
ஓய்வு பெற்ற உதவி காவல் ஆணையர்.

கடற்கரையில் தலைவர் காமராஜுக்கு ஒரு சிலை வைத்துள்ளனர்; கறுப்பு நிறத்தில், எளிய உருவத்தில், ஒரு அரைக்கைச் சட்டை, நான்கு முழ வேட்டியுடன் ஒரு தகப்பன், தன் பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வதுபோல், ஒரு கையில் ஒரு பையனையும் மற்றொரு கையில் ஒரு சிறு பெண்ணையும் ஆர்வத்துடன் அழைத்துப் போவதுபோல் சிலை அமைத்திருக்கிறார்கள்!

சிலை திறந்த நாள் அன்று நானும் அக் கூட்டத்தில் நின்றிருந்தேன், சிலையில் உள்ள பையனின் உருவத்தைப் பார்த்ததும் என் இதய அரங்கிலே ஒரு காட்சிதான் நினைவுக்கு வந்தது. இருபது வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம்! நான் அப்போது பூவிருந்தவல்லி வட்டாரத்துக்குப் போலீஸ் அதிகாரியாய் இருந்த சமயம். சிலையில் நிற்பவர்தான் அன்றையத் தமிழக முதல்வராக இருந்தார். ஒரு பள்ளி விழாவில் கலந்து கொண்டு சென்னைக்குப் புறப்படப் போகிறார். சாயங்கால வேளை. காரில் ஏறும்பொழுது சில பிரமுகர்கள் அவரை அணுகி, பக்கத்தில் ஒரு புதிய பள்ளியைக் கட்டி இருப்பதாகவும், அதைப் பார்வையிட்டுப் போகவேண்டுமென்றும் வேண்டிக் கொள்ள, பள்ளி என்றதும் உடனே ஒத்துக்கொண்டு, பள்ளி இருக்கும் சந்திற்கு நடந்தே சென்றார். அவருக்கு வேண்டிய போலீஸ் பந்தோபஸ்தை ஏற்பாடு செய்துவிட்டு அவருடன் சென்றேன். மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை உயர் அதிகாரி, மற்ற அதிகாரிகள் அவரைப் பின்தொடர்ந்தனர். பள்ளியைப் பார்வையிட்டு அவர் திரும்பி வருகையில், ஒரு ஏழைச் சிறுவன், கிழிந்த சட்டையையும் அரை நிஜாரையும் அணிந்து கொண்டு ஒரு சந்திலிருந்து முதல்வரைப் பார்க்கும்



ஆர்வத்துடன் ஓடிவர, அங்கே நின்று கொண்டிருந்த வயதான போலீஸ்காரர் அந்தப் பையனைத் தடுப்பதற்கு லத்தியை ஓங்க, பையன் மிரண்டு தெருவில் வந்து விழுந்தான். விழுந்த வேகத்தில் அவன் கால் முட்டிகளில் லேசான காயம் ஏற்பட்டு, ரத்தம் கசிய ஆரம்பித்தது. அருகில் வந்துவிட்ட முதல்வர் இதைக் கவனித்து விட்டார். அவருடன் வந்த நான் அதிர்ச்சியுற்றேன். ஓடிப்போய் பையனைத் தூக்கி நிறுத்தி, அவன் காயங்களில் வழிந்த ரத்தத்தைத்துடைத்து, அவனைச் சமாதானம் செய்ய, பையன் வலியையும் மறந்து சிரித்தான். முதல்வர் அவனைத் தட்டிக் கொடுத்து, 'படிக்கிறாயா?' என்று கேட்க, அவன் 'ஆம்' என்று தலையாட்டினான். பிறகு என் தோளில் கையை வைத்து ''நீங்கள் செய்தது எனக்கு ரொம்பவும் சந்தோஷம்' என்று பாராட்டினார்.

அன்று கண்ட அந்தச் சிறுவனையே நான் இந்தச் சிலையில் கண்டமாதிரி ஒரு பிரமிப்பு எனக்கு! அந்தச் சிறுவன இப்பொழுது வாலிபப் பருவமடைந்து, நன்கு படித்து ஒரு டாக்டராகவோ அல்லது இன்ஜினியராகவோ எங்கோ இருக்கலாம்! அவனும் அந்தச் சிலைத் திறப்பு விழாவுக்கு வந்து இருப்பான் என்றுகூட நினைத்துக் கொண்டேன்! கடற்கரையில் அந்தத் தலைவனின் சிலை நிற்கிறது! ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு, கடற்காற்று வீச, நின்று கொண்டேயிருக்கும். ஆனால் அவர் இன்று நம்மிடையே இல்லை! தமிழக முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட பெருந்தலைவர் அவர். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய 'உள்ளம்'—ஏழை எளியோரைக் கண்டு குமுறிய உயர்ந்த உள்ளம் படைத்த அவர் ஒரு கர்மவீரர். பாரெல்லாம் புகழும் காமராஜரே அவர்!

# அரசின் அறிவிப்புகள்

# ஆக்கப் பணிகள்

## 16-5-79 முதல் 15-6-79 வரை

*16—5—79.*

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெரிஞ்சலக்குடி ஊராட்சியில் ரூ. 25 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி சோமசுந்தரம் திறந்து வைத்தார்.

சென்னை மாநகரில், நகரின் அழகு கெடும் விதத்தில் புதிது புதிதாகக் குடிசைகள் உண்டாவதைத் தவிர்க்கும் வகையில், குடிசை மாற்று வாரியத்திற்கு உதவியாகத் தனிக் காவல் படை ஒன்றைத் தமிழகஅரசு வழங்கியுள்ளது.

மழை-புயலால் சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் பாதிக்கப்பட்ட சாலைகளைப் பழுதுபார்த்துச் செப்பனிட, சென்னை மாநகராட்சி ரூ. 50 இலட்சம் ஒதுக்கியுள்ளதாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அறிவித்தார்.

*17—5—79.*

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவோணம், பாபநாசம், தஞ்சை ஆகிய ஊர்களோடு தொடர்புடைய 37 கிராமங்களில் பேருந்து வழித்தடங்கள் வசதி செய்யப்பட்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் தலைமையில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைத் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பனைமரத் தொழில் வளர்ச்சிக்கு ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும். நடப்பாண்டில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் சீரிய பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இச்செலவை மாநில அரசும் மத்திய அரசும் சமமாக ஏற்கும் என அரசு அறிவித்தது.

தீப்பெட்டிகள் தயாரித்தல், எழுதும் சாக்கட்டிகள் தயாரித்தல், கவர்கள் செய்வது போன்ற வேலைவாய்ப்புகளில் 20 ஆயிரம் பெண்களை ஈடுபடுத்த, தக்க நடவடிக்கைகளைச் சமூகநலத் துறை மேற்கொண்டிருப்பதாக மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி தெரிவித்தார்.

*18—5—79.*

தமிழ்நாட்டில் குறுகியகால எம். பி. பி. எஸ்., மருத்துவப் பட்டப் படிப்பு முறையை அடுத்த ஆண்டு முதல் துவக்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதென மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சௌந்தரராசன் கூறினார்.

*19—5—79.*

கடலூரில், இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில், சேரன் போக்குவரத்துக் கழகத்தால் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் திறந்து வைத்தார்.

*20—5—79.*

தமிழக டான்சி நிறுவனம், இத்தாலிய நிறுவனம் ஒன்றுடன் இணைந்து, மிதியடிகள் தயாரிக்கும் திட்டம் ஒன்றினைத் தமிழகத்தில் செயல்படுத்த இருப்பதாக மாண்புமிகு கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு கா. இராசாமுகமது அறிவித்தார்.

தமிழ்நாட்டில் மதுவிலக்கைத்தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக 145 மதுவிலக்குக் காவல் நிலையங்கள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*21—5—79.*

மலைச்சாதியினர் மேம்பாட்டை உயர்த்துவதற்காக, ஒவ்வொரு மலைச்சாதியினர் குடும்பத்திற்கும் தலா 5 ஏக்கர் நிலம் வழங்குவது பற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருவதாக மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு பெ. சௌந்தரபாண்டியன் தெரிவித்தார்.

# குடிசைகள் கோபுரமாகின்றன!

குடிசைவாழ் மக்கள் வாழ்வில் புத்தொளி ஒளிர செயலாற்றி வருகிறது, தமிழக அரசின் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

புரட்சித் தலைவரின் இரண்டாண்டு கால ஆட்சியில் 1,050 லட்ச ரூபாய் செலவில் ஏறத்தாழ 11,000 புதிய வீடுகள் கட்டி குடிசை மக்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன.


ஆயிரக்கணக்கானோர் விரைந்து பயன் பெற உலக வங்கி உதவியோடு, அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களிலும், சூழ்நிலை மேம்பாடு திட்டங்களிலும், 22,000 குடிசைவாழ் குடும்பங்கள் பயன்பெறுகின்றனர்: இதற்கு ஆகிய செலவு ரூபாய் 250 இலட்சங்கள்.

இந்த பகுதிகளில் கல்விக்கூடங்கள் மருத்துவ வசதி, கைத்தொழில் கல்வி மேலும் கேளிக்கை கூடங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. ஆக, குடிசைவாழ் மக்களின் வாழ்க்கையில் அடிப்படை மாற்றங்களைத் தோற்றுவித்து, அவர்களை நாகரீக மரியாதைக்குரிய குடிமக்களாக உருவாக்குகிறது குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

அன்று அண்ணன் கண்ட கனவுகளை நனவாக்க அயராது உழைக்கும் புரட்சித் தலைவர் வகுத்த பாதையில் தொடர்ந்து உழைப்போம என உறுதி கொள்வோம்.

ப. ராமபத்திரன், பி.ஏ, பி.எல்.,
தலைவர்







**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**
சென்னை - 600 035.

22—5—79.

''இந்தியாவிலேயே சர்க்கரைத் தொழிலாளர்களுக்கு தமிழகத்தில்தான் அதிக ஊதியம் தரப்படுகிறது. ஒவ்வொரு சர்க்கரைத் தொழிலாளிக்கும் 1—1—79 முதல் ரூ. 40.80 ஊதிய உயர்வு அளிக்கப்படும்'' என மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் கூறினார்.

23—5—79.

விவசாயிகளுக்குப் பல்வேறு இனங்களில் வழங்கப்பட்ட கடன்களை ரத்து செய்து, சிறு விவசாயிகளுக்கு ரூ. 40 கோடிக்கான சலுகைகளை அரசு அறிவித்தது. அரசு சென்ற ஆண்டு ஏற்கெனவே அறிவித்திருந்த 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பிற சலுகைகள் இதில் சேரா.

27—5—79.

விரைவில் நகரங்களுக்கும் மற்ற இடங்களுக்கும் சினிமா தியேட்டர்களில் 'காம்பவுண்ட்டிங் வரி விதிப்புமுறை' அமல்படுத்தப்படும் என மாண்புமிகு முதல்வர் அறிவித்தார்.

29—5—79.

அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களில் கண்பார்வை அற்றவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் தெரிவித்தார்.

1—6—79.

தமிழகத்தில் உள்ள சமூகசேவை நிறுவனங்களுக்குத் தமிழக அரசு தொடர்ந்து எல்லா உதவிகளும் அளிக்கும் என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அறிவித்தார்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 600 குடும்பங்களுக்கு ரூ. 31.5 இலட்சம் செலவில் நெய்வேலியில் குடியிருப்புகளைக் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது.

2—6—79.

'வரும் கல்வியாண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளில் சித்தமருத்துவம் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படும்' என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அறிவித்தார்.

4—6—79.

'தமிழ்நாட்டில் இந்த ஆண்டு 130 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படும்' என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் கூறினார்.

அரசு ஊழியர்களின் குறைந்த அளவு மாதாந்தர குடும்ப ஓய்வூதியத் தொகையை ரூ. 50-லிருந்து ரூ. 100 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

5—6—79.

அரசுத்துறை சம்பந்தப்பட்ட அனைத்துக் கோப்புகளும் இனிமேல் தமிழில் தான் எழுதப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட வார்த்தைகளைத் தமிழில் எழுதினால் வேறு பொருள் எழலாம் என்ற ஐயம் ஏற்படுமானால் அந்த வார்த்தைகளை மட்டுமே ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதலாம்.

7—6—79.

மறைந்த முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிபின்

மலேசியாவுக்கு சுற்றுப் பயணம் தொடங்கிய உவமைக் கவிஞர் *சுரதா* அவர்களுக்கு (29.5.79 ல்) நடைபெற்ற வழியனுப்பு விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் கலந்து கொண்டு சுரதாவுக்குப் பொன்னாடை போர்த்தினார்.



வாழ்க்கை வரலாற்றைத் தமிழக அரசே வெளியிடும் என்று மாண்புமிகு கிராமக் கைத்தொழில்துறை அமைச்சர் திரு கா. ராஜாமுகமது அறிவித்தார்.

**8—6—79.**

காவிரி ஆற்றின் குறுக்கே குளித்தலையையும் முசிறியையும் இணைக்கும் வகையில் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட—தமிழ்நாட்டிலேயே மிக நீளமான பாலம் (1,473 மீட்டர்) மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.

**9—6—79.**

திருச்சி தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏழை மக்கள் கறவை மாடுகள், ஆடுகள் வாங்குவதற்காக மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி ரூ. 95 ஆயிரம் கடனுதவி வழங்கினார்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே அடுத்த ஆண்டு முதல் தயாரித்துக் கொடுக்கும் என மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அறிவித்தார்.

**12—6—79**

அரசு ஊழியர்களின் நான்கு கோரிக்கைகள் மாண்புமிகு முதல்வர் அவர்களால்ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவை வருமாறு: ஆண்டொன்றுக்கு 15 நாள் தற்செயல் விடுப்பு என்றிருந்தது 20 நாட்களாக அதிகரிக்கப்பட்டது. கடை நிலை ஊழியர் என்ற பெயர் அடி படைப் பணியாளர் என்று மாற்றப்படுகிறது. இளநிலை உதவியாளர் நியமனம் 40 சதவீதம் பதிவுஅறை எழுத்தர் பதவியில் இருந்தும், 60 சதவீதம் தேர்வு ஆணைக் கழகம் மூலமும் தேர்ந்தெடுக்கப்படும். பதிவு அறை எழுத்தர், இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு பெறுவதன் பொருட்டு, வயதை 40 ஆக மீண்டும் குறைத்துவிடுவது.

**10—6—79.**

தமிழ் வ்ளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு ஆகியவை பற்றிக் கவனம் செலுத்துவதற்காக தமிழக அரசில் தனித்துறை அமைக்கப்படும். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அங்கீகாரம் பெற்ற எழுத்தாளர்கள் தமிழ்நாடு முழுவதும் பஸ்சில் பயணம் செய்வதற்குக் கட்டணச் சலுகை வழங்கப்படும். சிறந்த தமிழ் எழுத்தாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் 10 ஆயிரம் ரூபாயை அரசு வழங்கும் என மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அறிவித்தார்.

**12—6—79**

கதர் கிராமத் தொழில் வாரியப் பொருட்களுக்கு விற்பனை வரி கிடையாது என்று கிராமத் தொழில் அமைச்சர் திரு கா. ராஜாமுகமது அறிவித்தார்.

**14—6—79.**

பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்களான இலட்சிய வரலாறு, விடுதலைப் போர், திராவிடர் நிலை முதலிய புத்தகங்களுக்கும் அவற்றின் பிரதிகள், மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றுக்கும் 1949-ல் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி அரசு உத்தரவிட்டது.

**தமிழரசு - அடுத்த இதழ்**
**'வேளாண்மைச் சிறப்பிதழாக' மலருகிறது!**


CALL: 377

வலிவான பொலிவான விலைமலிவான

எல்லாவித துணிகளுக்கும் — மக்கள் ராசிக்கடை

# தமிழ்நாடு துணிக்கடை

M. G. ரோடு, விழுப்புரம்.

* * * * * *

Phone : 244

மகளிர் ராசிக் கடை....

**பூம்புகார் சாரி சென்டர் & பூம்புகார் துணிக் கடை**

* * * * * *

புதிய ஷோ ரூம்

அனைத்து மில் துணிகள் வாங்க

**மஹாராஜா & மகாராணி சாரீஸ்,**

விழுப்புரம் Phone : 551

**விரைவில் வருகிறாள் ஃபெமினா!**



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும் கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்!"


— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"




—பேரறிஞர் அண்ணா

# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



வெளியீடு :—
இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத்துறை.
தமிழ்நாடு அரசு.


தமிழரசு
16-7-1978
1
2
3
4
5
6
7
8
9